# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்


ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 316 சனி, டிசம்பர் 07, 2024 15 பக்கங்கள்


## பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அநுரகுமார அரசின் தடுமாற்றம்

அகிலன்



## மாகாணசபை முறைமையும் ஜே வி பி யின் வெறுப்பும் அன்றும் இன்றும்!

பா.அரியநேத்திரன்

## பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனமும் தமிழர் தேசமும்

பேராசிரியர்: இராமநாதன் சிறிரஞ்சன்



© 2024 இலக்கு இணையம்

# கஜேந்திரகுமாரின் முயற்சி வரவேற்கத்தக்கது

**பா.அரியநேத்திரன் மு.பா.உ**

அனைத்து தமிழ்தேசிய கட்சிகளுடனும் கலந்துரையாடி புதிய அரசியல்யாப்பு விடயமாக ஒரு நிலைப்பாட்டுக்கு கொண்டு வரும் முயற்சியில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமாரின் முயற்சி வரவேற்கத்தக்கது என மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் கூறுகையில், ''தற்போது தேசிய மக்கள் சக்தி இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அதிகூடிய ஆசனங்களை பெற்று 159, பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆட்சி பீடம் ஏறியுள்ளது.

பாராளுமன்றத்தில் எந்த ஒரு சட்டமூலத்தையும் இலகுவாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறை வேற்றக்கூடிய பலம் அவர்களுக்கு உண்டு.

இந்நிலையில் புதிய அரசியல் யாப்பு எதிர்வரும் வருடங்களில் தயாரித்து சுலபமாக அவர்கள் நிறைவேற்றக்கூடிய ஆதரவு அவர்களுக்கு உண்டு. இதனை சாதகமாக தமிழ் தலைமைகள் மாற்ற வேண்டிய கடமை சகல தமிழ் தலைவர்களுக்கும் உண்டு. இதில் கட்சி அரசியலுக்கு அப்பால் கொள்கை அரசியலே முதன்மை பெறவேண்டும்.

கடந்த நல்லாட்சி அரசின் காலத்தில் 2015, தொடக்கம் 2019, வரை பாராளுமன்றத்தில் பல குழுக்களை அமைத்து புதிய

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நம்பிக்கையில்லா தீர்மானம் மூலம் கவிழ்க்கப்பட்ட பிரான்ஸ் அரசாங்கம்



பிரான்ஸின் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் தோல்வியடைந்ததால் பிரதமர் மைக் கேல் பனியர் தலைமையிலான அரசு கடந்த புதன்கிழமை(4) பதவி இழந்துள்ளது. பிரான்ஸின் அதிபர் இமானுவேல் மக்ரோனினால் பிரதமர் பதவியில் நியமிக்கப்பட்ட அவர் மூன்று மாதங்களில் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்தானியாவின் வெளியேற்றம் தொடர்பில் இடம் பெற்ற பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட அவர் தனது செல்வாக்கை பயன்படுத்தி வாக்கெடுப்பின்றி வரவுசெலவுத்திட்டத்தை நிறைவேற்றியதாக குற்றம் சுமத்திய எதிர்க்கட்சிகள் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டு வந்திருந்தன.

1962 ஆம் ஆண்டுக்கு பின்னர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூலம் பிரான்ஸில் அரசு கலைக்கப்படுவது தற்போதே இடம் பெற்றுள்ளது. சில மாதங்க ளுக்கு முன்னர் பிரான்ஸில் இடம்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# இந்தியாவின் பொருளாதார திட்டத்தை பாராட்டிய பூட்டீன்



தேசியவாதத்தை முன்நிறுத்தி தனது உறுதியான பொருளாதார திட்டத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்துள்ளது பாராட்டுதலுக்குரியது என ரஸ்ய அதிபர் விளமிடீர் பூட்டீன் கடந்த புதன்கிழமை(4) ரஸ்ய தலைநகர் மொஸ்கோவில் இடம்பெற்ற முதலீட்டாளர்களின் மாநாட்டில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் அணுகுமுறையை பின்பற்ற ரஸ்யா விரும்புவதாகவும், இந்தியாவில் அதிக முதலீடுகளை ரஸ்யா எதிர்காலத்தில் மேற்கொள்ளும். இந்தியாவுக்கே முதலிடம் என்பது மோடியின் திட்டம், எனவே தான் இந்தியாவின் உற்பத்தியை அதிகரித்து அது பொருளாதாரத்தில் வளர்ந்து வருகின்றது. இந்தியாவில் எமது உற்பத்தி நிறுவனங்களை ஆரம்பிக்க நாம் திட்டமிட்டுள்ளோம். கடந்த காலங்களில் 20 பில்லியன் டொலர்கள் பெறுமதியான முதலீட்டை

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# நிறைவேற்றதிகார முறையை நீக்கப்பட வேண்டும் – சட்டத்தரணிகள் அமைப்பு

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையையும் பயங்கரவாத தடைச்சட்டத்தையும் நீக்க வேண்டும் என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறை காரணமாக சாத்தியமாகியுள்ள ஏதெச்சதிகார ஆட்சியானது ஜனநாயகம் சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை உள்ளிட்ட நிறுவனங்களின் சுதந்திரத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என சட்டத்தரணிகள் ஒன்றிணைவு தெரிவித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டமானது இலங்கையில் உள்ள பயங்கரவாதஎதிர்ப்பு கட்டமைப்பை கேலிக்கூத்தாக்கியுள்ளது, மேலும் சட்டபூர்வமானகருத்துசுதந்திரத்தை நசுக்குவதற்கு தொடர்ச்சியான ஆட்சியாளர்கள் தனிநபர்கள் குழுக்கள் நிறுவனங்களிற்கு எதிராக இதனை பயன்படுத்தியுள்ளனர் என சட்டத்தரணிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

பிரஜைகளிற்கு சாதாரணமாக வழங்கப்படவேண்டிய மனித உரிமை பாதுகாப்புகளை முழுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்தும் கொடுரமான விதிமுறைகளிற்காக பெயர்போயுள்ளது இந்த பயங்கரவாத தடைச்சட்டம் என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் கூட்டிணைவு, பயங்கரவாதம் பற்றிய

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# சிரியாவுக்கு இராணுவத்தை அனுப்ப ஈரான் திட்டம்



தற்போது சிரியாவின் வடக்கு பகுதியில் ஏற்பட்டுள்ள மோதல்களில் சிரிய படையினருக்கு உதவும் பொருட்டு தனது படையை அனுப்புவதற்கு ஈரான் தயாராக உள்ளதாக அதன் வெளிவிவகார அமைச்சர் அபாஸ் அரட்ச்சி இந்த வாரம் தெரிவித்துள்ளார்.

சிரிய அரசு கோரிக்கை விடுத்தால் முழு அளவிலான படை நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு ஈரான் தயாராக உள்ளது. சிரியாவில் ஏற்பட்டுள்ள பதற்றத்தை தவிர்ப்பதற்கு நாம் இயன்ற அளவில் பாடுபட்டு வருகின்றோம். அங்கு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கை மீண்டும் திருத்தியமைக்கப்படாது

## அரசாங்கம் திட்டவட்டமாகத் தெரிவிப்பு



சர்வதேச நாணய நிதியத்துடன் தற்போது ஏற்படுத்திக் கொண்டுள்ள இணக்கப்பாடுகளை மீண்டும் திருத்தியமைக்க முடியாது. அதில் காலதாமதங்களை ஏற்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை சவாலுக்கு உட்படுத்த முடியாதென வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இடைக்கால கணக்கறிக்கை மீது இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், ''எமக்கு பாரிய பொறுப்பொன்று சுமத்தப் பட்டுள்ளது. அதனை முழுமையாக பின்பற்ற அனைவரும் பிணைக்கப் பட்டுள்ளோம். நாங்கள் நீண்டகால திட்டங்களை செயல்படுத்த உள் ளோம். அதற்காக ஒரு

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# நமீபியாவில் பெண் அரச தலைவர் முதல் முறையாக தெரிவு



தென்னாபிரிக்க நாடான நமீபியாவில் இடம்பெற்ற அரச தலைவருக்கான தேர்தலில் 57 விகித வாக்குகளைப் பெற்று தற்போது ஆட்சியில் உள்ள கட்சியைச் சேர்ந்த நெட்டும்போ நன்டி டைற்வோ என்பவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்-மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு என்ற கட்சியின் 72 வயதான வேட்பாளரே வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட சுயாதீன வேட்பாளர் 25 சதவிகித வாக்குகளை பெற்றிருந்தார்.

அங்கு பட்டினி, ஊழல்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## மனிதஉரிமை மீறல் குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைவிதிக்குமாறு கோரும் ITJP

INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

இலங்கையில் மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான மீறல் குற்றங்களிலும், ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்ட அரச மற்றும் பாது காப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிராக தடைகளையும், நுழைவு அனுமதித்தடையையும் விதிக்குமாறு வலியுறுத்தி அதனுடன் தொடர்புடைய 60 க்கும் மேற்பட்ட கோரிக்கைகளையும், ஆவணங்களையும் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசாங் கங்களுக்கும், ஐ.நாசபைக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டம் அனுப்பிவைத்திருக்கிறது.

ஜொஹனஸ்பேர்க்கை தளமாகக்கொண்டு யஸ்மின் சூக்கா தலைமையில் இயங்கிவரும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பான உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டமானது இலங்கையின் அரச மற்றும் பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு எதிரான தடைகள் மற்றும் விசா அனுமதி தடைகள் தொடர்பான 60 க்கும் மேற்பட்ட கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருப்பதுடன் உலகளாவிய சட்ட வரம்பெல்லையின் பிரகாரம் வழக்குப்பதிவுகளையும் கோரியிருக்கிறது.

மனித உரிமைகள் தினத்தையொட்டி (எதிர் வரும் 10 ஆம் திகதி) தயாரிக்கப்பட்டிருக்கும் இக்கோரிக் கைகள் மற்றும் ஆவணங்கள் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, கனடா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவற்றின் அரசாங்கங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபைக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவை இலங்கை இராணுவம், கடற்படை, விமானப்படை, காவல்துறை, புலனாய்வுப்பிரிவு அதி காரிகள், நீதிபதிகள், முன்னாள் அமைச்சர்கள் உள்ளிட்ட அரச அதிகாரிகள் உள்ளிட்ட தரப்பினருடன் தொடர்புடைய கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் குறிப்பிடத்தக்க ஊழல் மோசடிகள் என்பன பற்றியவையாக இருக்கின்றன.

உள்நாட்டு யுத்தத்தின்போதும், அதற்குப் பின்னரு மான காலப்பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத படுகொலைகள், வலிந்து காணாமலாக்கப்படல்கள், பலவந்தமான கைதுகள் மற்றும் தடுத்துவைப்புக்கள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மிகமோசமான மனித உரிமை மீறல்களும், நாட்டின் அரச கட்டமைப்புக்களில் ஆழமாக வேரூன்றியிருக்கும் பாரிய ஊழல்களும் இக்குற்றங்களில் அடங்குகின்றன.

அதுமாத்திரமன்றி இம்மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதில் தடைகளை ஏற்படுத்தும் வகையிலான முறையற்ற தலையீடுகள், அதிகாரத்துஷ்பிரயோகங்கள் என்பனவும் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன.

இவற்றுக்கு மேலதிகமாக 1980 களின் இறுதியில் இலங்கையில் பணியாற்றிய இந்திய அமைதிகாக்கும் படையினரால் நிகழ்த்தப்பட்ட பாரதூரமான மனித உரிமை மீறல்களுடன் தொடர்புடைய இந்திய அமைதிகாக்கும் படையின் முன்னாள் அதிகாரிகளுக்கு எதிராகவும் தடைகளை விதிக்கும்படி மேற்குறிப்பிட்ட ஆவணங்களில் கோரப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கை தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட்டத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் யஸ்மின் சூக்கா, ‘கடந்தகால மீறல்கள் தொடர்பில்

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

இலக்கு

## ஈழத்தமிழர் இறைமையே ஈழத்தமிழரின் எதிர்காலம் இன்றே அதனை நிலைநிறுத்த இயன்றது செய்வோம்

"எங்கள் உரிமைகளே, எங்கள் எதிர்காலம், இன்றே அதனை நிலைநிறுத்துவோம்" (Our Rights, Our Future, Right Now) என்ற செயற்பாட்டு அழைப்பு டிசம்பர் 10ம் நாள் ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்படும அனைத்துலக மனித உரிமைகள் நாளுக்கான இவ்வாண்டுக்கான மையப்பொருளாக வைக்கப்பட்டுள்ளது.

சமுகநீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் அவர்கள் "தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்காலம் என்பது வடக்கு கிழக்குத் தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. அரசியல் களச் சூழ்நிலை அறிந்து எமக்கு இடையில் பலமான அரசியல் கூட்டு கட்டமைப்பை உருவாக்கினால் மட்டுமே நாம் எதிர் நோக்கும் அரசியல் போரினை எதிர்கொள்ள முடியும்" என்ற அனுபவரீதியான கருத்தை ஈழத்தமிழர்களிடை முன்வைத்துள்ளார்.

இந்நேரத்தில் இடம்பெறும் இவ்வாண்டுக்கான அனைத்துலக மனித உரிமைகள் நாளின் மையக்கருத்தை ஒவ்வொரு ஈழத்தமிழரும் தங்கள் நெஞ்சிருத்தி தேசமாக இணைந்து எழுந்து "எங்கள் உரிமைகளே எங்கள் எதிர்காலம் இன்றே அதனை நிலைநிறுத்துவோம்" என அனைத்துலக மனித உரிமைகள் நாளாம் டிசம்பர் 10இல் உள்ளத்தில் உறுதி எடுக்க வேண்டும் என்பது இலக்கின் அழைப்பாக உள்ளது.

அத்துடன் உலகில் மனித உரிமைகளைப் பேணி நிலை நிறுத்த விரும்பும் ஒவ்வொரு நாடும் அமைப்புக்களும் மக்களும் ஈழத்தமிழர்களுடன் இணைக்கப்படக்கூடிய வலைத்தளத்தை உலகெங்கும் வாழும் ஈழத்தமிழர்களின் ஒருங்கிணைந்த முயற்சி மூலம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் இலக்கு இவ்விடத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறது.

அனைத்துலக மனித உரிமைகள் சாசனம் 577 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு உலகில் அதிக அளவு மொழிபெயர்க்கப்பட்ட ஒன்று என்ற பெருமையைப் பெற்றுள்ளது. இதற்குக் காரணம் உலகின் ஒவ்வொரு மனிதனுக்கும் அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தைக் குறித்த தெளிந்த அறிவு தேவை என்பதாகும். அப்பொழுதுதான் ஒவ்வொரு மனிதனும் மனித உரிமைகளைப் பேணுவதும் மற்றவர்களைப் பேண வைப்பதும் தனது மனிதக்கடமை என்பதில் உறுதி பெறுவான். அத்துடன் மனித உரிமைகள் வன்முறைப்படுத்தப்படும் பொழுது அதனை மீள்நிலைநிறுத்த ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நாளும் போராட வேண்டிய பொறுப்புள்ளவனாக உள்ளான் என்ற அறிவு வளரும் பொழுதுதான் மனித உரிமைக்காப் போராடினால் தான் எந்த மனிதனாலும் தானும் தன்னைச் சுற்றியுள்ளவர்களும் பாதுகாப்பான அமைதியான வாழ்வினை வளர்ச்சிகளுடன் வாழ முடியும் என்கின்ற உண்மையும் தெளிவாகும். இவற்றை ஈழத்தமிழ் மாணவரிடையும் மக்களிடையும் மனித உரிமைக்கல்வியால் முன்னெடுக்க முயற்சிகள் எடுக்கப்படல் அவசியம் என்பது இலக்கின் கருத்து.

ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை என்பது அரசியற் பிரச்சினையல்ல மனித உரிமைப் பிரச்சினை என்பது தெளிவாக்கப்படாததினால்தான், சிறிலங்காவின் இறைமையை மீறி உலகநாடுகளும் அமைப்புக்களும், ஈழத்தமிழர் பிரித்தானிய காலனித்துவ அரசால் உருவாக்கப்பட்ட சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற கொடுங்கோன்மை ஆட்சியில் கடந்த 76 ஆண்டுகளாக அனுபவித்து வரும் இனஅழிப்பு இனத் துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு வாழ்வில் இருந்து, அவர்களை அனைத்துலகச் சட்டங்களின் கீழ் விடுவிக்க இயலாதுள்ளது.

பிரித்தானிய காலனித்துவ அரசால் தோற்றுவிக்கப்பட்டு காலனித்துவத்தால் தீர்க்கப்படாத அனைத்துலக நாடுகளின் மன்றத்தால் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினையான ஈழத்தமிழர் தங்களின் இறைமையை மீள் உறுதிப்படுத்தல் முயற்சிகளை மனித உரிமைக்கான போராட்டமாக உலகுக்கு வெளிப்படுத்தாது, தேசியப் பிரச்சினையை மொழிப்பிரச்சினை, இனப்பிரச்சினை மதப்பிரச்சினை என்ற தவறான விளக்கத்துடன் வெளிப்படுத்தும் வரை ஈழத்தமிழர்களை அனைத்துலக மனித உரிமைகள் சாசனத்தால் மட்டுமல்ல ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலகச் சட்டங்களாலும் பாதுகாக்கப்பட முடியவே முடியாது.

ஈழத்தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாகத் தொன்மையும் தொடர்ச்சியுமான இறைமையுடன் வாழ்ந்து வரும் இலங்கைத்தீவில் நவீன அரசியலில் யாழ்ப்பாண அரசாக உலகால் அடையாளப்படுத்தப்பட்ட அந்தத் தங்களின் தாயகத்தில் 22.05. 1972 முதல் சிறிலங்கா தங்களின் உள்ளக தன்னாட்சி உரிமையினைத் தனது தன்னிச்சையான அரசியலமைப்பால் மறுத்து, ஈழத்தமிழர்களின் இறைமையைச் சிங்களப் பெரும்பான்மை ஒற்றையாட்சிப் பாராளுமன்ற முறைமைக்குள் இணைத்த பிரித்தானிய காலனித்துவ அரசின் சோல்பரி அரசியல் யாப்பின் 29(2) விதியை வன்முறைப்படுத்தியதால் ஈழத்தமிழர்கள் பிரித்தானியக் காலனித்துவ அரசிடமிருந்து தங்களிடமே மீண்டு விட்ட தங்களின் மக்கள் இறைமையின் அடிப்படையில், தங்களை உலகின் அரசற்ற தேசஇனமாக வெளிப்படுத்தித் தங்களின் மக்கள் இறைமையின் அடிப்படையில் தங்களின் வரலாற்றுத் தாயகமான இலங்கையின் வடக்கு கிழக்கில் தங்களின் ஈழத்தமிழ்த்தேசியத்தைப் பேணி தங்களின் எவராலும் பிரிக்க இயலாத தங்களின் தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தித் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியான வளர்ச்சிகளுடன் கூடிய வாழ்வை வாழ்வதற்கான மனித உரிமை பேணும் முயற்சியே ஈழத் தமிழர் தேசியப் பிரச்சனை.

சுருக்கமாகச் சொன்னால் ஈழத்தமிழரின் தங்கள் மண்ணின் மேலான ஆக்கிரமிப்பில் இருந்து தங்களின் மண்ணையும் மக்களையும் விடுவித்தல் என்கிற அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைவான அரசியற் செயற்பாடே ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினை. தங்கள் மண்ணில் தங்களை இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு மூலம் வாழவிடாது தடுத்து தங்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் நாளாந்த வாழ்வுக்கும் இனங்காணக்கூடிய அச்சத்தை ஏற்படுத்தி மக்களை மண்ணை விட்டு வெளியேறச் செய்து தங்களின் நிலத்தை அபகரிக்கும் சிறிலங்கா என்னும் ஆக்கிரமிப்பு அரசில் இருந்து தாங்கள் விடுபட்டு பாதுகாப்பான அமைதி வாழ்வு வாழ்வதற்கான மனித உரிமைப் போராட்டமே ஈழத்தமிழர் தேசிய விடுதலைப் போராட்டம்.

இது பிரிவினையும் அல்ல பயங்கரவாதமும் அல்ல என்பதை இரத்தம் சிந்திய போராட்ட அனுபவத் தின் வழி மக்களால் ஆட்சிக்குக் கொண்டுவரப்பட்டுள்ள தேசிய மக்கள் சக்தி தெளிவாக உணர வேண்டும். பிரித்தானிய காலளித்துவம் உருவாக்கிய சிலோன் என்னும் ஒற்றையாட்சி நாடாகவோ சிலனிஸ் என்ற செயற்கைத் தேசியமாகவோ இலங்கைத் தீவின் மக்கள் என்றும் இருந்ததில்லை. 176 ஆண்டுகளாக பிரித்தானியரால் சிலோன் தேசியம் என்று ஒன்றை உருவாக்க இயலவில்லை என்பது வரலாறு. எனவே பிரித்தானியக்காலனித்துவ சிந்தனையின் நீட்சியான சிறிலங்கா என்ற ஒற்றையாட்சி நாடாகவோ சிறிலங்கன் என்ற தேசியமாகவோ இலங்கைத் தீவும் இருந்ததில்லை. இலங்கைத் தீவின் மக்களும் இருந்ததில்லை. இந்த உண்மையை மனதிருத்தி சான்றாதரங்களுடனும் ஆராய்ச்சியுடன் கூடிய அணுகுமுறையுடனும் இலங்கைத் தீவினதும் இலங்கைத் தீவின் மக்களதும் பாதுகாப்பையும் பொருளாதார வளர்ச்சிகளையும் மக்களின் ஆட்சியமைப்புக்களின் உறுதிப்பாட்டையும் முன்னெடுக்க விரும்பும் இன்றைய அரசத்தலைவரும் இன்றைய பிரதமரும் ஈழத்தமிழர்கள் குறித்த சான்றாதரங்களையும் ஆராய்ச்சிகளையும் கவனத்தில் எடுத்து ஈழத்தமிழர்களின் இலங்கைத் தீவின் இருப்பு மக்கள் தொகை சார்ந்ததல்ல. நிலத்தின் மீதான உரிமை சார்ந்தது. யாழ்ப்பாண அரசு-வன்னியரசு என்ற ஆட்சிப்பரப்பில் உள்ள நிலங்களையும் கடலையும் கொண்டது ஈழத்தமிழர் தாயகம் என்ற உண்மையின் அடிப் படையில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் முறைமைகளை அமைத்தால்தான் அது இலங்கைத் தீவுக்கான உண்மையான பலத்தை அளிக்கும்.

ஈழத்தமிழர் இறைமையுள்ள தாயகமாம் வடக்கு கிழக்கில் தாங்கள் பாதுகாப்பான அமைதியுடனும் வளர்ச்சிகளுடனும் வாழ்ந்து இலங்கைத் தீவின் அனைத்து மக்களுடனும் இணைந்து இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை வளர்த்து சமத்துவ சகோதரத்துவ சுதந்திரத் தீவாக இலங்கைத் தீவை இலங்கைத் தீவின் மக்கள் ஒவ்வொருவரும் பேணிட ஒருவருக்கு ஒருவர் துணை நின்றாலே இலங்கைத் தீவு இன்று எதிர்நோக்கும் பொருளாதார வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடும். உலகின் கலப்பு போர் முறைமைகளில் இந்து மாக்கடலின் முக்கிய தீவு என்ற நிலையில் இலங்கைத் தீவு அனுபவிக்க கூடிய வல்லாண்மை பிராந்திய மேலாண்மைப் போட்டிகளில் இருந்து இலங்கைத் தீவு பாதுகாப்புப் பெறும் என்பது இலக்கின் உறுதியான எண்ணம்

**ஆசிரியர்**

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அநுரகுமார அரசின் தடுமாற்றம்

அகிலன்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசநாயக்க ஜனாதிபதியாகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர் பயங்கரவாதத் தடைச் சட்டம் மூன்று தடவைகள் பயன் படுத்தப்பட்டிருக்கின்றது. அனைத்துத் தரப்பி னராலும் வெறுக்கப்படும் அந்த சட்டம் நீக்கப்படும் என்ற வாக்குறுதியுடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்திருந்தாலும் கூட, இந்தச் சட்டத்தின் கீழ் சிறையில் இருப்பவர்களின் எண்ணிக்கை கடந்த இரண்டு மாதங்களுக்குள் அதிகரித்துள்ளது.

எதிர்க்கட்சியாக இருந்து எதிர்ப்பு அரசிய லைச் செய்யும் போது சொல்பவை அனைத்தையும் அதிகாரத்துக்கு வந்தால் செய்ய முடியாது என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்ந்தாலும், அதனை நாம் துஷ்பிரயோகம் செய்யப் போவதில்லை என்று தேசிய மக்கள் சக்தி பின்னர் தெரிவித்தது. இதனைக் கைவிட்டுவிடுவதற்கு அவர்கள் தயாராகவில்லை என்பதை இது உணர்த்தியது.



இவ்விடயத்தில் அரசின் மீதான விமர்சனங் கள் அதிகரித்திருப்பதால், இந்த சட்டத்திற்கு பதிலாக மற்றொரு சட்டம் கொண்டுவரப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்திருக்கின்றார். அமைச்சரவைக் கூட்டத்தின் முடிவில் இதனை அவர் தெரி வித்திருப்பது, இதுதான் அமைச்சரவையின் முடிவு என்பதை உறுதிப்படுத்துகின்றது. ஆனால், புதிய சட்டமூலம் எப்போது கொண்டுவரப்படும் என்பது தெரிவிக்கப்படவில்லை.

மறுபுறத்தில் புதிய சட்டமூலம் கொண்டு வரப்படும் வரை தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடரும் என்பதைத்தான் அமைச்சரவைப் பேச்சாளர் மறைமுகமாகச் சொல்லியிருக்கின்றார். இதேபோன்ற ஒரு கருத்தைத்தான் சில வருடங்களுக்கு முன்னர் "நல்லாட்சி" எனப்படும் மைத்ரி - ரணில் அரசாங் கமும் சொன்னது. 2018 பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் என்ற பெயரில் ஒரு சட்டமூலத்தை அவர்கள் தயாரித்தார்கள். ஆனால், அது நிறைவேற் றப்படவில்லை.

அநுர செப்ரெம்பர் 21 தேர்தலில் ஜனாதிபதி யாக அதிகாரத்துக்கு வந்த பின்னர் மூன்று வெவ்வேறான சந்தர்ப்பங்களில் இந்த பயங் கரவாதத் தடைச் சட்டத்தை அவர் பயன் படுத்தியிருக்கின்றார். அக்ரோபர் மாதம் அறுகம்பை பகுதியில் இஸ்ரேலிய உல்லாசப் பயணிகள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக புலனாய்வுத் தகவல் ஒன்று வெளியானதையடுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான முதலாவது கைது இடம்பெற்றது. இச்சம்பவம் தொடர்பில் அதனைத் தொடர்ந்து நான்கு பேர் கைது செய்யப்பட்டனர்.

மாவீரர் தினத்தையொட்டி நவம்பர் 27 இல் முகநூல் மற்றும் சமூக ஊடகங்களில் பதிவுகள் செய்ததால் குறைந்தது மூன்று பேர் கைது செய்யப்பட்டனர். விடுதலைப் புலிகள் தொடர்பான சின்னங்கள் பயன்படுத்தியதுதான் இவர்கள் மீது தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு. முகநூலில் விடுதலைப் புலிகளையும், அதன் தலைவரையும் போற்றும் வகையில் பதிவை மேற்கொண்டவர் கைதான அதேவேளையில், அதனை "லைக்" பண்ணிய சிலரும் விசார ணைக்குள்ளாக்கப்பட்டனர். இந்தக் கைதுகளும், விசாரணைகளும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ்தான் முன்னெடுக்கப்பட்டன.




இதனைவிட இதேகாலப் பகுதியில், புலம் பெயர்ந்த தமிழர் ஒருவர் லண்டனிலிருந்து நாடு திரும்பிய போது கட்டு நாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். புலம் பெயர்ந்த தமிழர் 2008 இல் லண்டனுக்குச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கிளிநொச்சி யில் வசித்துவந்த தனது தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக வந்த போது, "பயங்கரவாத அமைப்புக்கு நிதி சேகரித்தார்" என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். பின்னர் பிணையில் அவர் விடுதலையாகியுள்ளார். ஆனால், வழங்கு முடிவடையும் வரை அவர் நாட்டைவிட்டு வெளியே செல்ல முடியாது. அவர் மீது பயணத்தடை உள்ளது.



இந்த மூன்று சம்பவங்களும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளை எதிர்கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஏற்கனவே கைதானவர்களின் பத்து பேர் வெலிக்கடை உட்பட பல சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் அனை வரும் 15 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடு பவர்கள்.

இந்தக் கைதிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். முகநூலில் பதிவுகளை மேற் கொண்டமைக்காக கைதாகி விசாரணைகளை எதிர்கொண்டிருப்பவர்கள் முதலாவது தரப்பினர். விசாரணை முடிவடையாமல் தடுப்புக் காவலில் இருப்பவர்கள் இரண்டாவது தரப்பினர். தண்டனை வழங்கப்பட்டவர்கள் மூன்றாவது தரப்பினர். இவர்கள் அனைவருமே அரசியல் கைதிகள்தான்!

அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக் கப்படுவார்கள் என்று நீதி அமைச்சர் பாராளு மன்றத்தில் கூறியிருக்கின்றார். ஆனால், நீண்ட காலமாக சிறையில் இருப்பவர்களும், போதிய சாட்சியங்கள் இல்லாமல் விசாரணைக் கைதிகளாக இருப்பவர்களையும் விடுதலை செய்வது தொடர்பில் ஆராயப்படுவதாகவும் நீதி அமைச்சர் கூறியிருக்கின்றார்.

இந்த விவகாரத்தை கொழும்பிலுள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதியின் கவனத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை வர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கொண்டு வந்திருக்கின்றார். ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்கவுடன் இது குறித்து தான் பேசுவதாக ஐ.நா. பிரதிநிதி உறுதியளித்திருக்கின்றார். ஆக, இவ்விடயத்தில் அரசின் மீதான சர்வதேச அழுத்தம் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

தேசிய மக்கள் சக்தியின் பிரதான கட்சி ஜே.வி.பி.தான். ஜே.வி.பி இரண்டு ஆயுதப் புரட்சிகளை நடத்தியது. அதன் தலைவர் றோஹண விஜயவீர உட்பட ஆயிரக் கணக்கானவர்கள் கொடூரமாக அரச படைகளால் கொல்லப்பட்டனர். ஜே.வி.பி.யின் தலைவர்களும் கடந்த காலங்களில் பயங்கரவாதிகளாகவே முத்திரை குத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம்தான் பாய்ந்தது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரத்தை ஜே.வி.பி.யினரும் அனுபவித்துள்ளார்கள். 1990 களில் ஆயுதங்களைக் கைவிட்டு ஜனநாயக வழிக்கு வருவதாக ஜே.வி.பி. பிரகடனம் செய்ததையடுத்து அதன் மீதான தடைகளும் தளர்த்தப்பட்டன.

பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பது ஒரு கொடூரமான சட்டம் என்பதில் சந்தேகமில்லை. இது யாருக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறதோ அவர்களின் அடிப்படை உரிமைகளை மீறுகிறது. இது ஒடுக்குமுறைக்கான மிக மோசமான கருவிக ளில் ஒன்றாகவே மனித உரிமை அமைப்புக்கள் குறிப்பிடுகின்றன.

சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்டங் களின் நெறிமுறைகளுக்கு எதிரானது என உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமை அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன மற்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை (UNHRC) மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்த சட்டமூலம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று கடந்த அரசாங்கங்களை வலியுறுத் தியிருந்தன.

கைதாகும் ஒருவரை நீண்ட காலத்துக்கு விசாரணை இல்லாமல் தடுத்து வைத்திருப்பதற்கு இன்றுள்ள ஒரே சட்டம் பயங்கரவாதத் தடைச் சட்டம்தான். தமக்கு உருவாகக்கூடிய எதிர்ப்புக் களை எதிர்கொள்வதற்கு இது போன்ற சட்டமூலம் ஒன்று அவசியம் என்பது பொதுவாகவே ஆட்சியா ளர்களின் கருத்தாக உள்ளது. அதனால், இந்த சட்டமூலத்தை நீக்குவதாக உறுதிமொழிகளைக் கூறினாலும் கூட, இதிலுள்ள சில அதிகாரங்களை உள்ளடக்கியதாக மற்றொரு சட்டமூலத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதில் அநுர அரசு கவனமாகவே இருக்கும் என்றுதான் தெரிகின்றது.

• • •

# மாகாணசபை முறைமையும் ஜே வி பி யின் வெறுப்பும் அன்றும் இன்றும்!

பா.அரியநேத்திரன்

இப்போது அரசியலில் பேசும் பொருளாக மாறி இருப்பது ஜே.வி.பி யின் பொதுச்செயலாளர் ரில்வின்சில்வாகூறிய மாகாணசபை முறைமையை புதிய அரசியலமைப்பு சட்டத்தில் நீக்கப்படும் என கூறிய கருத்தாகும்.



இது முதன்மை செய்தியாக பேசப்படுவது என்னைப்பொறுத்தவரை பொருத்தப்பாடானதாக நான் பார்க்கவில்லை.

ரில்வின் சில்வா மாகாணசபை முறைமையை தொடர்ந்தும் நாம் ஆதரிப்போம் என கூறியிருந்தால் அதனை முதன்மை செய்தியாக ஆச்சரியத்துடன் நோக்கலாம் என்பதே எனது வாதம்.

ஜே.வி.பி இன்று நேற்றல்ல 1987, ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரையும் இதனை எதிர்த்து வரும் ஒரு கட்சி என்பது சிறு குழந்தைக்கும் தெரியும்.

மாகாணசபைகளின் அல்லது 13வது திருத்தத்தின் இந்த தேக்க நிலைக்கு ஜே.வி.பி.யின் சந்தர்ப்பவாத, இனவாத அரசியல் முக்கிய பொறுப்பாக அமைகிறது. பண்டா செல்வா ஒப்பந்தம், டட்லி செல்வா ஒப்பந்தங்களுக்கு எதிராக செயற்பட்ட சிங்கள, பௌத்த வாதிகள்,அவர்களுடைய கட்சிகள் போன்றே சிவப்பு சட்டை ஜே.வி.பியும் தொடர்ச்சியாக எதிராக செயற்பட்டது என்பதே உண்மை.

ஈழவிடுதலைப்போராட்டத்தில் இந்தியாவின் பங்கு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் நிலை ஆரம்பத்தில் இருந்தது அதனால் திம்புப் பேச்சுவார்த்தைகள் இந்திய அரசின் அனுசரணையுடன் இலங்கை அரசுக்கும் தமிழீழ போராட்டத்துடன் தொடர்புடைய ஈழ விடுதலை இயக்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளுக்குமிடையே ஈழத்தமிழர்கள் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் நோக்குடன் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில்மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகளை குறிக்கும். இப்பேச்சுவார்த்தைகள் 1985,யூலை,08, தொடக்கம்13, வரையும் பின்னர் 1985, ஆகஷ்ட் 12,13, ம் திகதிகளில் இரண்டு கட்டங்களாக இடம்பெற்றன.

அதில் தமிழர் தரப்பு தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பாக அன்ரன் பாலசிங்கம், திலகரும், ஈழமக்கள்புரட்சிகரவிடுதலைமுன்னணி சார்பாக வரதராஜப்பெருமாள், கேதீஷ்வரனும், தமிழீழ விடுதலை இயக்கம் சார்பாக சாள்ஷ் அன்ரனிதாஸ், மோகனும்,ஈழம்புரட்சி அமைப்பு சார்பாக ராஜிசங்கர், இரத்தினசபாபதியும், தமிழ் மக்கள் விடுதலை கழகம் சார்பாக வாசுதேவா, சித்தாத்தனும், தமிழர் விடுதலை கூட்டணி சார்பாக சிவசிதம்பரம், சம்பந்தன், அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கை அரசின் தரப்பில் ஜே. ஆரின் சகோதரரும் பிரபல சட்டவாதியுமான எச்.டபிள்யூ. ஜெயவர்த்தன தலைமையிலான பத்துபேர் கலந்து கொண்டனர்.

இந்திய அரசு சார்பில் றொமேஸ் பண்டாரி தலைமையிலான குழு பேச்சுவார்த்தையில் மத்தியஸ்தம் செய்வதற்காக இணைந்திருந்தது.

இதில் தமிழர் தேசியம் தமிழர் தாயகம் தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை மற்றைய தமிழ் குழுக்களும் ஏற்றுக்கொண்டன. ஆனால் இக்கோரிக்கையைச் சிங்கள அரசு நிராகரித்தது.



இதனை தொடர்ந்துதான் 1987 யூலை 29 புதன்கிழமை இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவும், இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியும் கையெழுத்திடப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் படி அதே ஆண்டு 1987,நவம்பர் 14 சனிக்கிழமை விசேட பாராளுமன்ற அமர்வை கூட்டியே இலங்கை நாடாளுமன்றம் தனது அரசியலமைப்பில் 13ஆவது திருத்தம் மற்றும் மாகாணசபைச் சட்டம் இல. 42 (1987) ஆகியவற்றை அறிவித்தது. அதன்பிரகாரம்1988பெப்ரவரி,03 ம் திகதி திங்கள்கிழமை அன்று உத்தியோகபூர்வமாக ஒன்பது மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன.



அப்படி உருவாக்கப்பட்டாலும் எட்டு மாகாணசபையாகவே வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையாகவே இருக்கும் என எழுதப்படாத இணக்கப்பாடு ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும், இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்கும் பேச்சளவில் இணக்கம் காணப்பட்டது.அதன் அடிப்படையில் 1988, தொடக்கம் 2006, வரை 18, வருடங்களாக இணைந்த மகாணசபையாகவே இலங்கை அரசினால் நிருவாகம், மற்றும் நிதி ஒதுக்கீடுகள் கையாளப்பட்டன.

இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தல் முதன்முதலாக 1988,நவம்பர்,19 ல் நடைபெற்றது.

இலங்கை இந்திய ஒப்பந்தம், மாகாணசபை தேர்தல் என்பவைகளை விடுதலைப்புலிகள் ஏற்கவில்லை, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சுதுமலை பிரகடனம் 1987,ஆகஷ்ட்,04 அன்று, யாழ்ப்பாணம் சுதுமலையில் இடம் பெற்றது.



இந்திய இலங்கை ஒப்பந்தம் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சுதுமலையில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள், இந்திய இராணுவத் தளபதிகள், பத்திரிகையாளர்கள், முன்னிலையில் தலைவர் பிரபாகரன் தெளிவாக எடுத்துரைந்திருந்தார்.

அந்த உரையில் "இந்த ஒப்பந்தத்தால் எமது மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பதைப் பற்றி எமக்குச் சந்தேகம் எழுந்தது. ஆகவே, இந்த ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை இந்திய அரசுக்குத் தெள்ளத்தெளிவாக விளக்கினோம். ஆனால், நாம் ஏற்றுக்கொண்டாலும் ஏற்றுக்கொள்ளாமல் போனாலும் இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றியே தீருவோம் என இந்திய அரசு கங்கணம் கட்டி நின்றது.

இந்திய அரசின் நிலைப்பாடு குறித்து நாம் ஆச்சரியப்படவில்லை. இந்த ஒப்பந்தம் தமிழர் பிரச்சினையை மட்டும் தொட்டு நிற்கவில்லை. இது, பிரதானமாக இந்திய இலங்கை உறவு பற்றியது.

சிங்கள் இனவாத அரசின்மீது எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை என்பதையும், இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம் எடுத்துரைத்தேன். என தலைவர் கூறியிருந்தார் அன்று தீர்க்தரிசனமாக "இந்த ஒப்பந்தத்தை இலங்கை அரசு நிறைவேற்றப் போவதில்லை என்பதையும் இந்தியப் பிரதமரிடம்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# அனுரவின் இடதுசாரிக் கொள்கையும் வலதுசாரிச் சிந்தனை முன்னெடுப்பும்



## இறுதிப் பகுதி


ஐ.நா.வின் உள்ளகக் கணக்கெடுப்பின் படி, 2009ல் கொன்று குவிக்கப்பட்ட அப்பாவித் தமிழ் மக்களின் எண்ணிக்கை எழுபத்தைந் தாயிரம். ஜோசப் ராயப்பர் என்கிற மனிதநேய ஆயரின் கணக்கெடுப்பின்படி, ஒன்றரை லட்சம். அந்த உயிர்களுக்கு நீதி கேட்பது, எந்த விதத்திலும், அரசியல் கண்ணியத்துக்கு எதிரான தல்ல! கொல்லப்பட்டவர்களுக்கு நீதி கேட்பது, கொலையாளிகளின் மனத்தைப் புண்படுத்துமென்கிற வாதம், இனப்படுகொலை யைக் காட்டிலும் கொடுமையானது. இதைப் புரிந்துகொண்டுதான், தீர்ப்பு வழங்கியிருக்கிறது தமிழீழத் தாய்மண்.

என்றாலும், அயோக்கிய அரசியல்வாதிகளுக்குத் தண்டனை கொடுப்பதாக நினைத்துக் கொண்டு, தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே தண்டித்துக் கொண்டிருக்கிறார்களோ என்கிற அச்சம் இதயத்தை உலுக்குகிறது. சந்திரிகா, மைத்திரி, ரணில் – என்று, தென்னிலங்கைத் தலைகள் அனைத்தும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதைக் காலங்கடந்துதான் தமிழ்மக்கள் உணரமுடிந்தது. அந்த வரிசையில் வந்து நிற்கிறார், திருவாளர் அனுரா. இதை உணர தமிழ் மக்களுக்கு நீ ண்ட காலமாகாது. என்றாலும், அதற்குள் என்னென்ன நடக்கக் கூடும் என்கிற கணிப்பு, அச்சம் தருகிறது.

பதின்மூன்றுக்கு எதிர்ப்பு, வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பு – உள்ளிட்ட அனுராவின் பழைய வரலாற்றை வேண்டுமானால், ஓரளவுக்கு மறந்துவிடலாம். அவரது சமீப வரலாற்றை எப்படி மறக்க முடியும்?

2009ல், பல்லாயிரக் கணக்கில் தமிழ் மக்கள் கொன்றுகுவிக்கப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில், அனுரா என்ன செய்துகொண்டிருந்தார்? லசந்த விக்கிரமதுங்க, பிரகீத் எக்னலிகொட - போன்ற சிங்கள அறிவுஜீவிகள், அரசின் அச்சுறுத்தல்களுக்கு அஞ்சாமல், போரின் பெயரால் ராஜபக்ச குடும்பம் அரசுப் பணத்தைச் சுரண்டியதை அம்பலப்படுத்தினார்களே.... அதற்கான விலையாக தங்கள் உயிரையே கொடுத்தார்களே.... அப்போது இன்றைய இலங்கை அதிபர் என்ன செய்துகொண்டிருந்தார்? மகாவிகாரையில் தியானம் செய்துகொண்டிருந்தாரா? கொத்துக் கொத்தாக தமிழர்கள்கொல்லப்பட்டபோது, அந்த அப்பாவித் தமிழ் மக்களின் பிணக்குவியல், அனுராவின் கண்களில் படாமலேயே போனது எப்படி?

சொந்தச் சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும், ராஜபக்ச அரசின் அந்தக் கொலை வெறியாட்டத்தால்சிந்தை குளிர்ந்துபோய் மகிழ்ச்சியில் திளைத்ததே சிங்கள சமூகம்... அனுராவுக்கு இது தெரியுமா தெரியாதா? தமிழின அழிப்பைக் கொண்டாட வீதிக்கு வீதி பால் அப்பம் கொடுத்துக் கொண்டிருந்தார்களே பௌத்த சிங்கள வெறியர்கள்.... தன்னை கம்யூனிஸ்டாகக் காட்டிக்கொள்கிற அனுரா, மானுட நாகரிகத்துக்கு முற்றிலும் முரணான அந்த வக்கிரபுத்தியை ஏன் கண்டிக்கவில்லை?



**புகழேந்தி தங்கராஜ்**

இந்த எல்லாக் கேள்விக்கும் ஒரே பதில்தான்....! பெரும்பான்மையினத்தின் வாக்கு வங்கியை இழந்துவிடுவதை, அனுரா என்கிற இந்த போலி கம்யூனிஸ்ட் ஒருபோதும் விரும்ப மாட்டார். மன வக்கிரத்துடன் பௌத்த சிங்கள மக்கள் விநியோகித்த பால் அப்பத்தை, மன மகிழ்ச்சியுடன் வாங்கி அவர் ருசிபார்த்திருந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை. இன மத வெறியுடன் சொந்தச் சகோதரர்கள் கொன்று குவிக்கப்பட்டதைக் கொண்டாடிய ஒரு இனத்தின் மன வக்கிரத்தைக் கண்டிக்கத் தவறிய ஓர் அரசியல்வாதியால், சிங்கள மக்களுக்கு இணையாக, தமிழ்மக்களுக்கு எதைக் கொடுத்து விட முடியும்?

பெரும்பான்மையினத்தின் மனித விரோத மனோபாவத்தைக் கண்டும் காணாதவர்போல, வெளித்தெரியாத வலதுசாரி மனோபாவத்துடன் நடமாடிக் கொண்டிருந்தவர் அனுரா - என்பதுதான் உண்மை. இப்படியொரு பொய்முக அரசியல்வாதி, எப்படி இடதுசாரியாக இருக்க முடியும்?

தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாளிலேயே, அனுராவின் சிகப்புச்சாயம் வெளுத்துப் போயிருக்கிறது. ஒருபுறம்மாவீரர் நாள் நிகழ்வுகளை அனுமதித்துவிட்டு, இன்னொருபுறம் – 'உள்ளகப் பொறிமுறை மூலம்தான் தீர்வு' என்று, வெளியுறவு அமைச்சர் வாயிலாக, பகிரங்கமாக அறிவிக்கிறார் அனுரா. தமிழர் தாயகத்தில், மாவீரர் நாளை அனுமதிக்கும் நாடகம். தென்னிலங்கைக்கு, 'சர்வதேச விசாரணையையெல்லாம் அனுமதிக்கவே மாட்டோம்' என்கிற சிக்னல். பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் – என்கிற இந்த இரட்டைவேடப் போக்கு, அனுரா யார் என்பதை அம்பலப்படுத்தியிருக்கிறது.

தமிழினப் படுகொலையின் சூத்திரதாரிகள், அனுரா குமார ஆட்சியிலாவது சட்டத்தின் முன் நிறுத்தப்படவே ண்டும் – என்கிற எதிர்பார்ப்பை எடுத்த எடுப்பிலேயே துடைத்து எடுத்து குப்பைத் தொட்டியில் போட்டிருக்கிறார் அனுரா. ஜெனிவாவிலிருந்து நெருக்கடி வருகிற போதெல்லாம், புதிய அதிபர் வந்திருப்பதாலும் ஆட்சி மாறியிருப்பதாலும் அவகாசம் தேவை என்று இலங்கை புலம்புவது வழக்கம். அதே வசனம்தான் மீண்டும் ஒலிக்கப் போகிறது என்பதையும், அதே காலங்கடத்தும் போக்கைத்தான் அனுராவும் கடைப்பிடிப்பார் என்பதையும்தான் இது காட்டுகிறது. போர்க்குற்றங்களை விசாரித்தால் இனங்களுக்கு இடையிலான விரோதமும் பதற்றமும் அதிகரித்துவிடும் - என்கிற மைத்திரிபாலாக்களின்அபத்தமான வாதத்தைத்தான் இவரும் தூக்கிப்பிடிக்கப் போகிறார் என்பதற்கான முன்னறிகுறி இது.

எந்த நீதிபதியும் தன் மீதான வழக்கைத் தானே விசாரித்துக் கொள்ள முடியாது. இது உலக நீதி. மனித சமுதாயத்தின் அடிப்படை அறம். இதற்கு உலை வைத்த தனது முன்னோடிகளுடன் இணைந்து கொண்டிருக்கிறார் அனுரா. போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சர்வதேச நீதிப் பொறிமுறைக்கு இணக்கம் தெரிவிக்கும்விதத்தில், ஜெனிவாவில் அதுதொடர்பான தீர்மானத்தைத் தானும் சேர்ந்தே கொண்டுவந்து, உலக அரங்கில் ஒரு நாடகத்தை நடத்திய இலங்கை, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மறுநாளே, 'எங்களை நாங்களேதான் விசாரித்துக் கொள்வோம் – என்று தன் சட்டையை உரித்து சுயரூபத்தைக் காட்டியது. அதன்மூலம் ஒட்டுமொத்த சர்வதேசத்தையும் முட்டாளாக்கியது. அதைத்தான் அனுராவும் செய்கிறார். ராஜபக்சக்களையும், பௌத்த சிங்கள ராணுவக் குற்றவாளிகளையும், எப்படியாவது காப்பாற்றுவது என்கிற அனுராவின் நிலைப்பாடு, அவர் யாரென்பதைக் காட்டுகிறது.



பல்லாயிரக் கணக்கில் அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்த ராணுவம்தான், அதிபர் அனுராவின் பாதுகாப்புக்கு நிற்கிறது. அவர்களுக்குப் பாதுகாப்பாக அனுரா நிற்கிறார். இதுதான் யதார்த்தம்.

இப்போதைய நிலையில், தாயகத் தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும், அனுரா என்ன கொடுப்பாரென்று காத்திருப்பதைவிட, அனுரா எதைக் கொடுக்க வேண்டுமென்று திட்டவட்டமாகத் தெரிவிப்பது மிகமிக முக்கியம். 13, 13 பிளஸ், அரசியல் தீர்வு... போன்ற வழக்கமான வார்த்தைகளை வைத்துக் கொண்டே

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

# இளைஞர்களுக்கு வழிவிடுவோம்

துரைசாமி நடராஜா

இலங்கையின் 10 வது பாராளுமன்ற தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இத்தேர்தலில் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றி பெற்று 159 ஆசனங்களை கைப்பற்றியுள்ளது. இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சி ஒரு மிகப்பெரும் சாதனையாக கருதப்படும் நிலையில் மலையகம் உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள் பெரும் பின்னடைவை சந்தித்துள்ளன. இதன் எதிர் விளைவுகள் பல்வேறு மட்டங்களிலும் எதிரொலிக்கும் என்று அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இலங்கை இவ்வருடத்தில் இரண்டு முக்கிய தேர்தல்களை சந்தித்தது. ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் என்பன அவை இரண்டுமாகும். இதனடிப்படையில் கடந்த செப்டம்பர் மாதம் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க 57,40,179 வாக்குகளைப் பெற்று நாட்டின் நிறைவேற்று ஜனாதிபதியாக தெரிவானார். இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 42.31 வீதமாகும். தேசிய மக்கள் சக்தியின் அலை சூடு தணியுமுன்னே பொதுத் தேர்தல் கடந்த நவம்பர் மாதம் 14 ம் திகதி இடம்பெற்று முடிந்துள்ளது.



இத்தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொள்ளும் வாய்ப்புள்ளதாக ஏற்கனவே ஆரூடங்கள் கூறப்பட்டன. இது தற்போது மெய்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் இக்கட்சி பாராளுமன்றத்தில் 159 ஆசனங்களைக் கைப்பற்றி சாதனை படைத்திருக்கின்றது. இதுவரை இடம்பெற்ற பொதுத் தேர்தல்களில் கூடுதலான ஆசனம், கூடுதலான தேசியப் பட்டியல் ஆசனம், கூடுதலான தொகுதிகளில் வெற்றி, ஒரு கட்சி பெற்ற கூடுதலான வாக்குகள், ஒரு வாக்காளர் பெற்ற அதிகூடிய விருப்பு வாக்குகள் என்று தேர்தலின் சகல பரப்புகளிலும் தேசிய மக்கள் சக்தியே முன்னணியில் இருக்கின்றது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் 57,40,179 வாக்குகளைப் பெற்றுக் கொண்ட இக்கட்சி பொதுத்தேர்தலில் 68,63,186 வாக்குகளைப் பெற்று சரித்திரம் படைத்திருக்கின்றது. எனவே ஜனாதிபதி தேர்தலைக் காட்டிலும் 11,23,007 வாக்குகள் குறுகிய காலத்தில் இக்கட்சிக்கு அதிகமாக கிடைத்திருக்கின்றன. இதற்கு தேசிய மக்கள் சக்தியின் கீழ்மட்ட வேலைத்திட்டங்கள் மிகவும் வலுவானதாக காணப்படுகின்றமையே பிரதான காரணமாகும் என்று கருதப்படுகின்றது.

### எரிக் சொல்ஹெய்ம்

இந்நிலையில் இலங்கை நாடாளுமன்ற தேர்தலில் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள மிகப்பெரும் வெற்றி ஆழமான சீர்திருத்தங்களுக்கான ஆணையை வழங்குகின்றது என இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். அனுரகுமார திசாநாயக்க அல்லது மக்களால் ஏகேடி என அழைக்கப்படும் இடதுசாரி கூட்டணியின் தலைவர் இலங்கையில் முழுமையான தேர்தல் வெற்றி பெற்றிருக்கின்றார். பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமையில் சிக்கியுள்ளவர்களை மீட்பதற்கான பொருளாதார சீர்திருத்தம் என்பவற்றில் புதிய மக்கள் ஆணை வலுவாகவுள்ளது. தேசிய நல்லிணக்கம், சிறுபான்மை தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கான உரிமைகள் உட்பட ஊழலுக்கு எதிராக கடுமையான போராட்டம் என்பன நாட்டில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்களை பிரதிபலிக்கின்றது என்று சொல்ஹெய்ம் மேலும் குறிப்பிட்டுள்ளார். பல்வேறு கசப்பான அனுபவங்களை வரலாற்றில் சந்தித்த இக்கட்சி இன்று உலகளாவிய ரீதியில் பேசப்படும் கட்சியாக மேலெழும்பியுள்ளமை குறித்து உலகத் தலைவர்கள் தமது வாழ்த்துக்களை தேசிய மக்கள் சக்திக்கு தெரிவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.



தேசிய மக்கள் சக்தி தேர்தல் மாவட்டங்கள் 22 இல் போட்டியிட்டு 21 இல் அமோக வெற்றி பெற்றுள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே பின்னடைவு கண்டுள்ளமையும் தெரிந்ததேயாகும். இவ்வெற்றி மலையக கட்சிகள் உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகளை நிலைகுலைய வைத்துள்ளது. தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியால் மலையக கட்சிகளின் வாக்கு வங்கியில் கணிசமான சரிவு ஏற்பட்டுள்ள நிலையில் மலையக மக்களின் கணிசமான வாக்குகள் தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு அடித்தளமாகியுள்ளன என்பதையும் மறுப்பதற்கில்லை. இந்நிலையில் சமகாலத்தில் மட்டுமன்றி இடதுசாரிக் கட்சிகளை ஏற்கனவே இந்திய வம்சாவளி மக்கள் ஆதரித்துள்ளமையை வரலாறு உணர்த்துகின்றது.



இதனடிப்படையில் இலங்கையில் 1947 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தல் மிகவும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. இத்தேர்தலில் இடதுசாரி கட்சிகளின் பிரதிநிதித்துவம் அதிகரித்தமைக்கு இந்திய வம்சாவளி மக்களே வலுசேர்த்திருந்தனர். இலங்கை - இந்திய காங்கிரஸ் பாராளுமன்றத்துக்கு இத் தேர்தலில் ஏழு பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பி இருந்த நிலையில் அது இந்திய வம்சாவளி மக்களின் அரசியல் ஆளுமையை புலப்படுத்தியதாக அப்போது பலரும் பேசிக் கொண்டனர். காங்கிரஸ் போட்டியிடாத தொகுதிகளில் தோட்டத் தொழிலாளர்கள் இடதுசாரிக் கட்சிகளை ஆதரித்தனர். இந்நிலையில் 14 தொகுதிகளில் இந்திய தொழிலாளரின் ஆதரவுடன் வேட்பாளர்கள் வெற்றி பெற்றனர். லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த என்.எம்.பெரேரா எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றார்.

தேர்தலுக்கு பின் இலங்கை - இந்திய காங்கிரஸ் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினருடன் அமர்ந்து முக்கியமான விடயங்களில் இடதுசாரிகளுடன் சேர்ந்து வாக்களித்தனர். இதனால் இனவாதிகள் அச்சமடைந்தனர். 1947 ம் ஆண்டு தேர்தல் முடிவுகள் ஐக்கிய தேசிய கட்சிக்கு பெரும் சவாலாக அமைந்தது. 95 தொகுதிகளில் 42 தொகுதிகளில் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றது. இந்நிலைக்கு இந்திய வம்சாவளி மக்களின் எழுச்சி, இம்மக்கள் இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவளித்தமை என்பன முக்கிய காரணமாக அமைந்ததெனக் கருதிய ஐ.தே.க. இந்திய வம்சாவளி மக்களின் வாக்குரிமை மற்றும் பிரசாவுரிமை என்பவற்றை பறித்தெடுப்பதில் கவனம் செலுத்தி பின்னர் அதில் வெற்றியும் கண்டது. பிரசாவுரிமை மற்றும் வாக்குரிமை என்பன இல்லாததன் காரணமாக இம்மக்கள் எதிர்கொண்ட சவால்கள், அதனால் ஏற்பட்ட தழும்புகள் இன்றுவரை மாறியதாக இல்லை. இது சகல துறைகளிலும் எதிரொலிக்கின்றது. இல்

### ஐ.தே.க. பின்னடைவு

இடதுசாரிக் கட்சிகளுக்கு ஆதரவளித்ததால் இந்திய வம்சாவளி மக்களை பல துறைகளிலும் நிர்வாணப்படுத்திய ஐ.தே.க. இன்று தேசிய மக்கள் சக்தி என்னும் இடதுசாரிக் கட்சியால் தான் நிர்வாணமாகி இருக்கின்றது. மலையகம் உட்பட நாடளாவிய ரீதியில் போட்டியிட்ட இக்கட்சி மிகவும் குறைந்தளவு வாக்குகளைப் பெற்று



பாராளுமன்றத்தில் ஒரேயொரு ஆசனத்தை மட்டுமே கைப்பற்றிக் கொண்டுள்ளது. நுவரெலியா மாவட்டத்தில் யானைச் சின்னத்தில் இக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த ஜீவன் தொண்டமான் மட்டுமே வெற்றி பெற்றுள்ளமை நோக்கத்தக்கதாகும். ஒரு காலத்தில் ஐ.தே.க.வின் கோட்டையாக விளங்கிய இம்மாவட்டத்தில் இக்கட்சிக்கு 66,234 வாக்குகள் மட்டுமே கிடைத்தன. இது அளிக்கப்பட்ட வாக்குகளில் 0.59 வீதமாகும். மலையக மக்களுக்கு இழைத்த

தொடர்ச்சி 13ஆம் பக்கம்

# உயிர் கொடுக்கும் உயிர்களைக் காத்தல் எம் பணி...

பொன்னன்–சுவிஸ்

'சல்லியர்கள்' சிறப்புக் காட்சிகள் ஐரோப்பிய நாடுகளில் திரையிடப்பட்டது. திரைப்படப் பயணத்தின் முதற் காட்சியாக சுவிற்சலாந்திலும் பின்னர் பிரான்ஸ், நோர்வே, பிரித்தானியா போன்ற நாடுகளில் 2024 நெவெம்பர் மாதத்தில் சல்லியர்கள் திரையேறினார்கள். சிறப்புக் காட்சிகளில் கலந்து சிறப்பிப்பதற்காக தயாரிப்பாளரும் நடிகருமான கருணாஸ் அவர்கள் வருகை தந்திருந்தார்கள்.




தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மருத்துவப் போராளிகளின் பங்கு பற்றிய தகவல்கள் வெளியுலகிற்கு பெரிதாகத் தெரிவதில்லை. அது பற்றிய ஆவணங்களும் வரவில்லை. 'சல்லியர்கள்' திரைப்படம் அதனை நிவர்த்தி செய்கிறது.




தமிழீழத்தில் இடம்பெற்ற விடுதலைப் போரின்போது, மருத்துவப் போராளிகளின் போராட்ட வாழ்வையும் அவர்களது ஈகத்தையும் எடுத்தியம்பியமபும் திரைப்படம். மருத்துவ போராளி தூயவன் எழுதிய புத்தகக் குறிப்பில் இருந்தும் மற்றைய போராளிகளின் போராட்ட அனுபவங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட உண்மை சம்பவங்களைக் கோர்வையாக்கி, அதனைக் கதையாக்கி, திரைக்கதையாக்கி, நெறிப்படுத்தப் பட்டிருந்தது. இதில் நேரடியாக தமிழீழம், புலிகள், சிறீலங்கா என்று குறிப்பிடாது, குறியீட்டு வடிவத்தில், பொருள்விளக்கும் நெருங்கிய சொல்லாடல்களுடன் திரைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் இயக்கம் தி. கிட்டு. இவரது முதல் இயக்கம் 'மேதகு 1'. நெறியாளுமையின் துல்லியம் அதில் காட்டப்பட்டிருக்கிறது. நடிகர், தயாரிப்பாளர், இயக்குனர் என்று பல்பரிமாண முள்ள தமிழ் உணர்வாளர் சேது கருணாஸ் அவர்களின் தாயாரிப்பிலும் நடிப்பிலும் சல்லியர்கள் கரு உருப்பெற்று திரைக்குக் கொண்டு வரப் பட்டிருக்கிறார்கள்.

இந்தியத் தமிழ்ச் சினிமா மொழியிலும் இந்தியத் தணிக்கைக் குழுவின் வரம்புகளுக்குட்பட்டும் மிகைப்படுத்தலின்றி மிக நேர்த்தியாக ஒரு மருத்துவப் பெண் போராளியின் கதையாக திரைப்படம் பயணிக்கிறது. மனித வாழ்வின் காதல், அன்பு, பாசம், கவலை, எழுச்சி, தியாகம், போன்ற




அனைத்து நுண் உணர்வுகளும் மிக் கட்டுப்பாடாகக் கலக்கப்பட்டிருக்கிறது. இக் கதையின் நாயகி மிகவும் சிறப்பாக நடித்திருக்கிறார். உடல்மொழி, உரையாடல் வெளிக்கொணர்வு மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார். அந்தப் பாத்திரமாக வாழ்ந்திருக்கிறார். அனைத்துப் பாத்திரங்களும் தத்தம் பங்கை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று தமிழர் விடுதலைப் போராட்டமாக உள்வாங்கப்பட்டு, உலகத் தமிழ்ச் செயற்பாட்டாளர்கள் தமது அடையாளமாகவும் அதன் அங்கமாகவும் தம்மை அடையாளப் படுத்துகிறார்கள்.

போரின் ரணங்கள் மறக்கப்பட்டு 15 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் நினைவூட்டும் நிகழ்வுகளாக காட்சிகள் திரையில் விரிகின்றன. வீரம் பொங்கியது. அடிவயிறும் கலங்கியது.

மூச்சும் முட்டியது. இதயம் கனத்தது. பேசாது பேசப்படும் உணர்வாகத் தலைவர் வருகிறார். தமிழீழ விடுதலைப் போராட்ட சில நிகழ்வுகளை அவ்வப்போது தமிழ்நாட்டு சினிமா உள்வாங்கியதுண்டு. எதிர்மறையாக இந்திய முழுநீள சினிமாவும் வந்ததுண்டு. இன்று முதல் முறையாக ஒரு மருத்துவப் போராளிகளின் போராட்ட வாழ்வை முழுநீள திரைப்படமாக தமிழ் உணர்வாளர் சேது கருணாஸ் அவர்கள் தயாரித்து வெளியிட்டுள்ளார். அவரது கரங்கள் பலப்படுத்தப்பட்டால் மேலும் பல படங்கள் உருவாகும்.

2025 ஜனவரி முதல் உலக வெளியீடாக தமிழ்நாட்டிலும் உலக நாடுகளிலும் தமிழர்கள் அனைவரும் பார்க்க 'சல்லியர்கள்' வருகிறார்கள்! வரவேற்றுக் கொள்வோம்!

*தமிழால் ஒன்றுபடுவோம். தமிழராய் நிமிர்வோம்.*

# பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனமும் தமிழர் தேசமும்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை டிசம்பர் 10, 1948 அன்று பாரிசில் உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனத்தை (UDHR) பொதுச் சபை தீர்மானம் 217A ஆக அறிவித்தது, உலகில் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அடித்தளமாக, அனைத்து மக்களின் உள்ளார்ந்த கண்ணியம் மற்றும் சமமான மற்றும் பிரிக்க முடியாத உரிமைகளை அங்கீகரிக்கும் உயர்ந்த இலட்சியத்துடன். "மனித உரிமைகளை அலட்சியம் செய்வதும் அவமதிப்பதும் மனிதகுலத்தின் மனச்சாட்சியை சீற்றப்படுத்திய காட்டுமிராண்டித்தனமான செயல்களுக்கு வழிவகுத்துள்ளன" (யு.டி.எச்.ஆர், 1948) என்று அது மேலும் அடையாளம் கண்டது. சாதாரண மக்களின் மிக உயர்ந்த அபிலாஷை "பேச்சு மற்றும் நம்பிக்கை சுதந்திரம் மற்றும் பயம் மற்றும் தேவையிலிருந்து சுதந்திரத்தை அனுபவிப்பது" என்றும் அது அறிவித்தது (யு.டி.எச்.ஆர், 1948). யு.டி.எச்.ஆர்; இல் 30 சரத்துகள் உள்ளன, மேலும் இலங்கையின் அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் 76 ஆண்டுகளுக்கும் மேலாக தண்டனையிலிருந்து விலக்களிப்புடன் ஒவ்வொரு பிரிவையும் மீறியுள்ளன. இதன் விளைவாக, சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியல் அமைப்பின் பெரும்பான்மைவாத ஆட்சியின் காரணமாக இந்த உயர்ந்த இலட்சியங்கள் இலங்கைத் தீவில் வாழும் ஈழத்தமிழர்களிடம் இருந்து தொடர்ந்து நழுவி வருகின்றன.




'தமிழ் மக்கள் ஒரு தேசம்' என்ற அடையாளத்தை அழிக்க, இலங்கை தனது அரசியல் மற்றும் இராணுவ பலத்தை தொடர்ந்து பயன்படுத்துகிறது. இனப்படுகொலை உடன்படிக்கை (1951) இனப்படுகொலையை "ஒரு தேசிய இன, அல்லது மதக் குழுவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அழிக்கும் நோக்கத்துடன் செய்யப்படும் செயல்கள்" என்று வரையறுக்கிறது. "குழுவின் உறுப்பினர்களைக் கொல்வது, குழுவின் உறுப்பினர்களுக்கு கடுமையான உடல் அல்லது மன ரீதியான தீங்கு விளைவிப்பது, குழுவின் உடல் ரீதியான அழிவை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ கொண்டு வர வேண்டுமென்றே குழு வாழ்க்கை நிலைமைகளை திணிப்பது, குழுவிற்குள் பிறப்புகளைத் தடுக்கும் நோக்கத்துடன் நடவடிக்கைகளை திணிப்பது, குழுவின் குழந்தைகளை மற்றொரு குழுவிற்கு வலுக்கட்டாயமாக மாற்றுவது" என்று அது மேலும் வரையறுக்கிறது.

எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக ஈழத் தமிழர்கள் இலங்கையில் இனப்படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள் என்பதற்கு யு.டி.எச்.ஆர் சரத்துகள் மீறப்பட்டிருப்பது தெளிவான சான்றுகளை முன்வைக்கிறது. மே 2009 இல், இலங்கை தமிழர்களை "பாதுகாப்பு வலயத்திற்குள்" செல்லுமாறு வலியுறுத்தியது, பின்னர் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி வான்வழி குண்டுவீச்சு மற்றும் எறிகணைத் தாக்குதல்களை



நடத்தி, 70,000 க்கும் மேற்பட்ட அப்பாவி ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கொன்றது; ஆனாலும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்க ஐ.நா மனித உரிமைகள் பேரவை தவறிவிட்டது. இதற்கு மாறாக, 1995 ஜூலையில் சேர்பிய இராணுவத்தால் 8,000 பொஸ்னியர்கள், பெரும்பாலும் ஆண்களும் சிறுவர்களுமான Srebrenica படுகொலை செய்யப்பட்டது, மேலும் படுகொலைகளை தடுக்க சர்வதேச தலையீட்டிற்கு வழிவகுத்தது. ஜூலை 2015 இல், ஐரோப்பிய நாடாளுமன்றம் மற்றும் அமெரிக்க காங்கிரஸ் ஆகியவை ஸ்றெபிறெனிக்கா படு

பேராசிரியர்:
**இராமநாதன் சிறிரஞ்சன்**

கொலையை இனப்படுகொலை என்று விவரிக்கும் தீர்மானங்களை ஏற்றுக்கொண்டன. ஆனால், இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானங்கள் பாதிக்கப்பட்டவர்களை தமிழர்களாக அடையாளம் காணத் தவறியதால், இலங்கையில் நடந்து கொண்டிருக்கும் உண்மையான இனப்படுகொலை மறைக்கப்பட்டுள்ளது.




இலங்கையின் வரலாற்றைப் பார்க்கும் போது, சிங்கள தேசம் தனது பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி, இலங்கையில் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்றை அழிப்பதன் மூலம், தமிழர் தேசத்தை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுவருவதைத் தெளிவாகப் பார்க்கக்கூடியதாகவுள்ளது. மே 2009 இல் முள்ளிவாய்க்காலில் எழுபதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம், இலங்கையின் வருந்தத்தக்க மனித உரிமை மீறல்களை வெளிச்சம் போட்டுக் காட்ட எடுத்தது. ஆயினும்கூட, சக்திவாய்ந்த நாடுகளிடமிருந்து இலங்கைக்கு கிடைத்த ஆதரவு, இந்து சமுத்திரத்தில் அவர்களின் புவிசார் அரசியல் நலன்கள் மற்றும் படுகொலைகளில் அவர்கள் தொடர்புபட்டதன் காரணமாக, இலங்கை தான் செய்வதாக வாக்குறுதியளித்ததை நிறைவேற்ற தேவையற்ற கால நீட்டிப்புகள் மூலம் எந்தவிதத்திலும் பயனற்ற எச்சரிக்கைகளை மட்டும் வழங்கிவருகிறது.



மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் அனைத்து மனிதகுலமும் அந்த சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் உரிமைகளை அனுபவிப்பதை உறுதி செய்வதற்காக பிரகடனப்படுத்தப்பட்டது. யு.என்.எச்.ஆர்.சி.க்கு யு.டி.எச்.ஆர் இல் பொறிக்கப்பட்டுள்ள கொள்கைகளை உறுப்பு நாடுகள் கடைப்பிடிப்பதை உறுதி செய்வதற்கான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏழு தசாப்தங்களுக்கும் மேலாக மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்பட்டு வரும் சூழலில், தமிழர்களுக்கு நீதி வழங்குவதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தரப்பில் ஏற்பட்ட பாரிய தோல்வி தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். நியாயமற்ற போர்களையும் இனப்படுகொலைகளையும் நிறுத்தத் தவறும் ஐ.நா அமைப்பை ஒரு சில சக்திவாய்ந்த நாடுகளின் புவிசார் அரசியல் நலன்கள் கடத்த அனுமதிக்க வேண்டுமா? மனச்சாட்சி உள்ள அனைத்து நாடுகளும் தங்கள் சுயநலனுக்கு அப்பாற்பட்டு, ஐ.நா அமைப்பைப் பயன்படுத்தி தங்கள் புவிசார் அரசியல் நலன்களைப் பின்பற்றும் நாடுகளை எதிர்க்காவிட்டால், இந்த பிராந்தியத்திலும் பிற இடங்களிலும் அமைதி என்பது மழுப்பலாகவே இருக்கும். ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை இணை அனுசரணை வழங்கிய நிலைமாறுகால நீதி தொடர்பான அனைத்து தீர்மானங்களும் இருந்தபோதிலும், சிங்களம் அல்லாத பௌத்தர்களுக்கு எதிரான வன்முறைகள் மீண்டும் நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதற்கான எந்தவொரு சட்டமும் நிறைவேற்றப்படவில்லை. மத சிறுபான்மையினருக்கு எதிரான வன்முறை சமீப காலங்களில் தண்டனையிலிருந்து விலக்களிப்புடன் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. ஒரு தொடக்கமாக, மனச்சாட்சி உள்ள ஒவ்வொரு தனிநபரும் தங்கள் அரசியல்வாதிகளை புவிசார் அரசியல் நலன்கள், பொருளாதார நன்மைகள் மற்றும் விவாத அரசியலுக்கு அப்பால் உயரவும், மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில் பொறிக்கப்பட்டுள்ள கொள்கைகளை உயர்த்திப் பிடிக்கவும் கோரலாம், இதனால் உலகின் ஒவ்வொரு குடிமகனும் மனித உரிமைகளின் உலகளாவிய பிரகடனத்தில் உள்ள அனைத்து பிரிவுகளின் நன்மைகளையும் உண்மையிலேயே அனுபவிக்க முடியும்.

• • •



தமிழீழத் தேசியக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் பவள விழா சிறப்பு மலர் அறிமுக விழா சுவிற்சர்லாந்து

பத்திரிகைச் செய்தி 01.12.2024

# தமிழீழ தேசியக் கவிஞனின் பவள விழா

## - நூல் அறிமுகம்

### நூல் ஒருங்கிணைப்பு குழு, மற்றும் கலைஞர்கள்

தமிழீழத் தேசியக் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் பவள விழா சிறப்பு மலர் அறிமுக விழா சுவிற்சர்லாந்து சூரிச் மாநிலத்தில் 01.12.2024 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வானது 12 மணியளவில் வரவேற்புச் சுடர் ஏற்றலுடன் ஆரம்பமானது. திரு திருமதி ஐவரி கரோலின் ஆகியோர் வரவேற்புச் சுடரை ஏற்றி வைத்தனர். தொடர்ந்து பொதுச் சுடரினை அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் ஏற்றி வைத்தார் தமிழீழத் தேசியக் கொடியினை கேணல் சேரலாதனின் துணைவியார் திருமதி அமலா அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மாவீரர் பொதுத் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை தாயகத்தின் மூத்த ஒலிப்பதிவாளர் திரு கிருபா அவர்கள் ஏற்றி வைத்தார்.

திருவுருவப் படத்திற்கான மலர் மாலையினை கப்டன் சூரியத்தேவனின் சகோதரி திருமதி சர்வீனா பார்த்திபன் அவர்களும் மற்றும் கப்டன் முல்லையின் சகோதரி திருமதி உமாதேவி சந்திரமோகன் அவர்களும் அணிவித்தனர். தொடர்ந்து அகவணக்கம் மலர் வணக்கம் என்பன இடம்பெற்றன. மலர் வணக்கத்தினை மேஜர் அன்பரசனின் சகோதரன் திரு அகலினியன் அவர்கள் தொடக்கி வைத்தார். விழாச் சுடரேற்றலுடன் அரங்க நிகழ்வுகள் ஆரம்பமானது.

முதல் நிகழ்வாக திருமதி வாணி சர்மா அவர்களின் நெறியாள்கையில் அகடமி ஒப் ஆட்ஸ் நடனப் பள்ளி மாணவர்களின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது தொடர்ந்து செந்தமிழ் அருட்சுனைஞர் சிவருசி திரு தர்மலிங்கம் சசிகுமார் அவர்களின் வாழ்த்துரை இடம் பெற்றது. வாழ்த்துரையினை தாயகத் திரைப்பட இயக்குனர் திரு அன்பரசன் நிகழ்த்தினார். தொடர்ந்து தனது தந்தை மாரீசனின் கவிதையை அருட்தந்தை றெஜினோல்ட் அடிகளார் வாசித்தார். தொடர்ந்து தாயக இசையமைப்பாளர் திரு முகிலரசன் அவர்களின் நெறியாள்கையில்








ராகா கலைக் கல்லூரி மாணவர்களின் "போரிசை" எழுச்சிப்பாடல் நிகழ்வு ஆரம்பமானது. மேலும் "தமிழீழப் பெருங்கவிக்குப் பரணிப் பாமாலை" நிகழ்வு தாயகக் கவிஞர்களால் அரங்கேற்றப்பட்டது. அடுத்து கருத்துரையினை படைப்பாளி திரு. அ.இன்பன் அவர்கள் வழங்கினார். தொடர்ந்து "போரிசை" பாடல்கள் இடம்பெற்றன.

தொடர்ச்சி 11ஆம் பக்கம்



மதிய உணவு இடைவேளையினைத் தொடர்ந்து இளங்கலைஞர்கள் வழங்கிய இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. திரு.இணுவையூர் மயூரன் அவர்களின் பவளவிழா மலர் அறிமுகவுரையினைத் தொடர்ந்து பவள விழா மலர் அறிமுகம் இடம்பெற்றது. கரும்புலி மேஜர் சதாவின் சகோதரியும் மேஜர் பண்டாரவன்னியனின் துணைவியுமான திருமதி கோமதி அவர்கள் நூலினை வழங்க கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் உறவினரான திருமதி சுபாஜினி அருளானந்தன் அதனைப் பெற்றுக் கொண்டார் சமநேரத்தில் கவிஞர் பற்றிய காணொளி திரையிடப்பட்டது.



முதன்மைத் தகையோருக்கான நூல் வழங்கலும் சிறப்புப் தகையோருக்கான நூல் வழங்கலும் தொடர்ந்து இடம்பெற்றன.



சிறப்புப் பிரதிகளை *Herr. Luc Marof,*சமூக சேவை ஆர்வலர் *Herr. Bernhard Lerch, Mitglied des TKG( Tamil Kultur Zentrum Glarus)* அங்கத்தவர், தமிழ்க் கலாச்சார மன்றம், கிளாறவுஸ். *Marcel Bossonnet, Rechtsanwalt, Zürich, Swiss,* திரு. S.சதீஸ், திரு, B.ரமணன், திருமதி. நந்தினி, திருமதி. சாமினி திருமதி வேணி , இசையமைப்பாளர் திரு. சந்தோஷ் ஆகியோரும் தேசப்பற்றாளர்கள் பலரும் பெற்றுக்கொண்டனர்.



நூல் வெளியீட்டுரையினை ஊடகவியலாளரும் நூல் வெளியீட்டுக் குழுச் செயற்பாட்டாளருமான திரு பார்த்தீபன் அவர்கள் வழங்கினார். சிறப்புரையினை விடுதலைப்புலிகள் சஞ்சிகையின் ஆசிரியர் திரு. ரவி அவர்கள் நிகழ்த்தினார். ஊடகவியலாளரும் நூல் வெளியீட்டுக் குழுச் செயற்பாட்டாளருமான திரு கனகரவி அவர்கள் நூலின் ஆய்வுரையினை நிகழ்த்தினார்.





தொடர்ந்து நிதர்சனம் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட “புரட்சிப் பா முதல்வன்” ஒளி ஆவணம் மற்றும் பிரான்ஸ் கலை பண்பாடுக் கழக உருவாக்கத்தில் வெளிவந்த “புதுவையின் புதுமை” இசைப்பேழை ஆகியன அறிமுகம் செய்து வைக்கப்பட்டன. தாயகத்தின் மூத்த ஒலிப்பதிவாளர் திரு. கிருபா அவர்கள் இப் பிரதிகளை வழங்க மாவீரர் கேணல் நாகேஷ் அவர்களின் மகள் செல்வி தேனுஜா பெற்றுக் கொண்டார்.



கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் பற்றிய டொச் மொழியிலான உரையை செல்வி தீபிகா அவர்கள் நிகழ்த்தினார். தொடர்ந்து ராகா கலைக் கல்லூரி மாணவர்களின் “போரிசைப் பாடல்கள் இடம்பெற்றன தொடர்ந்து அகடமி ஒப் ஆட்ஸ் நடனப் பள்ளி மாணவர்களின் “தேடலின் ஆத்மராகம்” நடனம் இடம்பெற்றது.



தமிழீழத் தேசியக் கவிஞரின் உறவினரான திரு அருளானந்தனின் கவிதையினைத் தொடர்ந்து போரிசைப் பாடல்கள் சில அரங்கேறின. நிறைவாக நன்றியுரையினைத் தமிழீழத் தேசியப் பாடகியும் படைப்பாளியுமான திருமதி மணிமொழி கிருபாகரன் நிகழ்த்தினார். சிறப்பாக நடைபெற்ற இந் நிகழ்வில் கலைஞர்கள்,தேசப்பற்றாளர்கள், ஊடகவியலாளர்கள், படைப்பாளிகள், முன்னாள்ப் போராளிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். “நம்புங்கள் தமிழீழம்” பாடல் இசைக் கவிடப்பட்டபின் தமிழீழத் தேசியக் கொடி கையேற்கப்பட்டு நிகழ்வு இனிதே நிறைவுற்றது.













## மாகாணசபை ... தொடர்ச்சி ...

எடுத்துரைத்தேன்” என கூறியது எவ்வளவு உண்மை இன்றுவரை 37, வருடங்களாக இது நிறைவேறவில்லை தலைவர் கூறியதுதானே நடந்தது, நடக்கிறது.

இணைந்த வடகிழக்கு மாகாணசபை தேர்தலை விடுதலைப் புலிகள் புறக்கணித்தனர். அப்போது அரசியல் கட்சியாக இருந்த தமிழர் விடுதலை கூட்டணியும் இந்த தேர்தலை புறக்கணித்தனர்.

ரெலோ,புளட் என்பவைகளும் இந்த தேர்தலில் போட்டியிடவில்லை வடகிழக்கில் இந்திய அமைதிப்படையின் துணையுடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈபிஆர்எல்எவ்) ஈழம் தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈஎன்டிஎல்எவ்) , ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கியதேசியக்கட்சி ஆகிய நான்கு கட்சிகள் மட்டுமே அந்த தேர்தலில் போட்டியிட்டு ஈபிஆர்எல்எவ் கிழக்கில் 17, இடங்களையும், வடக்கில் 24, இடங்களுமாக மொத்தம் 41, ஆசனங்களையும்,ஸ்ரீலங்கா முஷ்லிம் காங்கிரஷ் கிழக்கில் மட்டும் 17, ஆசனங்களையும், ஈஎன்டிஎல்எவ் வடக்கில் மட்டும் 12, ஆசனங்களையும், ஐ தே. கட்சி கிழக்கில் மட்டும் ஒரு ஆசனத்தையும் பெற்று மொத்தமாக 71, ஆசனங்களுடன் திருகோணமலையில் முதலமைச்சராக வரதராஜப்பெருமாளை நியமித்து இணைந்த வடகிழக்கு மாகாணசபை ஆட்சி அமைக்கப்பட்டது ஆனால் 1990,மார்ச்,31, ம் திகதி வரையுமே மாகாணசபை இயங்கியது அதாவது 1. வருடம்,5, மாதம்,12, நாட்கள் வரதராஜப்பெருமாள் நாட்டை விட்டு ஓடும்போது தமிழீழத்தை திருகோணமலையில் வைத்து பிரகடனப்படுத்திவிட்டே இந்தியப்படையினருடன் கப்பலில் ஏறி இந்திய ராஜஸ்தானுக்கு சென்றார்.

இதனுடன் வடகிழக்கு மாகாணசபை இயங்கவில்லை எனினும் ஆளுநர் அதிகாரத்தில் 2006, வரை செயல்பட்டது.

2004,ல் இடம்பெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் ஜே.வி.பி 34, ஆசனங்களை பெற்றிருந்தது. தமிழ்த்தேசிய கூட்டமைப்பு 22, ஆசனங்களை பெற்றிருந்தது, மகிந்த ராஷபக்சவின் அரசுக்கு ஜே.வி.பி பூரண ஆதரவை வழங்கி அமைச்சு பதவிகளையும் பெற்றது.

அதில் தற்போதய ஜனாதிபதி அனுரா அமைச்சரவையில் விவசாயம், கால்நடைகள், நிலம் மற்றும் நீர்ப்பாசன அமைச்சராக 2004 பெப்ரவரியில் நியமிக்கப்பட்டார். 2005 யூன் 16 இல் அவர் தனது அமைச்சர் பதவியை ராஜினாமா செய்தார், ஏன் இராஜனாமா செய்தார் என்று தெரியுமா? ஜே.வி.பி தலைவர் அமரசிங்க, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடனான வட, கிழக்கு மாகாணங்களின் சுனாமி நிவாரண ஒருங்கிணைப்புப்பொறிமுறையை எதிர்த்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து விலகுவதற்கு ஜே.வி.பி தலைவர் அமரசிங்க எடுத்த தீர்மானத்தைத் தொடர்ந்து, ஏனைய ஜே.வி.பி அமைச்சர்களுடன் சேர்ந்து அனுரவும் 2005 யூன் 16 ம் திகதி தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்த இனவாதிதான் இந்த ஜனாதிபதி அனுரா.

சரி அதோடு மட்டும் விட்டார்களா? 1987, தொடக்கம் 2006, வரை 18, வருடங்களாக எந்த ஒரு ஜனாதிபதிகளோ கட்சிகளோ செய்யாததை மகிந்தவுடன் இணைந்து உயர் நீதி மன்றில் வழக்குப்போட்டவர்கள் இதே ஜே.வி.பி தான்.

அதனால் 2006 அக்டோபர் 16 இல் உயர் நீதிமன்றத்தில் வடக்கு கிழக்கு மாகாணங்களை தனித்தனி மாகாணங்களாக பிரிக்கும் தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்த தீர்ப்பை அவசர அவசரமாக செயல்படுத்தும்படியாகவே கிழக்கு மாகாணசபை தனியாக பிரிக்கப்பட்டதை தொடர்ந்து, கிழக்கு மாகாணத்திற்கான தேர்தல் 2008,மே,10,ம் திகதி நடாத்தப்பட்டது.

இந்த தேர்தலும் கிழக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு போட்டியிடக்கூடாது என்ற சதியை பிள்ளையான், கருணா ஆயுத ஒட்டுக்குழுக்களை கொண்டு அப்போதய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப் பினர்கள், கட்சி ஆதரவாளர்களை எச்சரித்து கொலை அச்சுறுத்தலை காட்டி மகிந்த அரசும், இந்தியாவும் விரும்பிய சிவனேசதுரை சந்திரகாந்தன் என்ற பிள்ளையானை முதலமைச்சராக நியமித்த வரலாறு இடம்பெற்றது.

முதலாவது கிழக்கு மாகாணசபை 2008லும், இரண்டாவது கிழக்கு மாகாணசபை தேர்தல் 2012,செப்டம்பர்,08, ம் திகதியும் இடம்பெற்றது. அது போலவே வடக்கு மாகாணசபைக்கான தேர்தல் 2013,செப்டம்பர் 21ல் இடம்பெற்றது.

அதன்பின்னர் 2024, வரை எந்த ஒரு மாகாணசபை தேர்தல்களும் இதுவரை நடைபெறவில்லை. காணி பொலிஷ் அதிகாரம் இல்லாத மாகாணசபை தேர்தலை பெயரளவிலாவது நடத்த முடியாமல் ஆளுநரை முகவர்களாக வைத்து செயல்படும் நிலை தொடர்கிறது.

கடந்த ஜனாதிபதி தேர்தலில் தற்போதய ஜனாதிபதி அனுரா அதிகாரப்பகிர்வு தொடர்பாக தமிழ் மக்கள் விரும்பினால் மாகாணசபை முறைமை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்பதை கூறியிருந்தார், தேர்தல் விஞ்ஞாபனத்திலும் மாகாணசபை 13, வது அரசியல் திருத்தம் ரத்துச்செய்வதாக குறிப்பிடவில்லை.

ஆனால் தேசிய மக்கள் சக்திக்கு 159, பெரும்பான்மை ஆசனங்கள் கிடைத்தது. குறிப்பாக யாழ்மாவட்டத்தில் மூன்று ஆசனங்களும் வன்னியில் இரண்டு ஆசனங்கள் கிடைத்து இலங்கையில் 22, மாவட்டங்களில் மட்டக்களப்பு மாவட்டம் தவிர்ந்த 21, மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி திசைகாட்டி அலைக்கு செல்வாக்கு உள்ளது என்பதால் எதையும் நினைத்தபடி செய்யலாம்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும் நாமே, பாராளுமன்ற பெரும்பான்மையும் நாமே என்ற திமிருடன் அதன்பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா இப்போது புதிய அரசியல் யாப்பில் மாகாணசபை முறைமை இருக்காது என கூறுகிறார்.

ஜே.வி.பி தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரை ஏனைய கட்சிகளின் செயலாளர்கள் கூறுவதைப்போல் இந்த கருத்தை தட்டிக்கழிக்க முடியாது. மாகாணசபை முறைமை இல்லை என கூறும் ரில்வின் சில்வா இனப்பிரச்சினைக்கு மாற்றீடான எந்த தீர்வை முன்வைக்கப்போகிறார், ஒற்றையாட்சிக்குள் குதிரை ஓடும் தீர்வை முன்வைப்பது என்பது தமிழர்களின் இனப் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது என்பதே அனைத்து தமிழ்த்தேசிய கட்சிகளின் கொள்கை.

அப்படியானால் வடக்கு கிழக்கில் இருந்து தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து பாராளுமன்றம் சென்ற பேசாமடந்தைகளான உறுப்பினர்கள் இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள்? அவர்களுக்கு வாக்களித்த தமிழர்கள் என்ன சொல்லப்போகிறார்கள்? குறிப்பாக யாழ்மாவட்டத்தில் திசைகாட்டி அலையில் சிக்குண்டு மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களை தலையாட்ட அனுப்பிய மக்கள் என்ன சொல்லப்போகிறார்கள்,

ஜனாதிபதி அநுராவை கடந்த (04/12/2024) சந்தித்த தமிழரசுக்கட்சி எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களிடம் புதிய அரசியல் யாப்பு ஏற்படுத்தப்படும்போது அரசியல் தீர்வை பார்ப்போம் ஆனால் மாகாணசபை தேர்தல் உள்ளூராட்சி தேர்தல் முடிந்த பின்னர் நடத்தப்படும் என கூறியுள்ளார் பார்க்கலாம்.

இதேவேளை இந்த வாரம் முதலாவது வெளிநாட்டு பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளும் ஜனாதிபதி அனுராவிடம் பாரதப் பிரதமர் என்ன சொல்லப்போகிறார் என்பதை பொறுத்துப்பார்ப்போம்.

## சர்வதேச நாணய ... தொடர்ச்சி ...

சிறந்த பொறிமுறையை கையாள வேண்டும். அதற்காகதான் நாடாளு மன்றத்தில் குறுகியகால தீர்மானங் கள் சில எடுக்கப்படுகின்றன.

அதன் ஒரு கட்டமாக தான இடைக்கால கணக்கறிக்கையொன்றை முன்வைத்துள்ளோம். இதில் நீண்டகால இலக்குகள் இல்லை. இடைக்கால கணக்கறிக்கையில் நீண்டகால பொருளாதாரத் திட்டங்களை முன்வைக்க முடியாது. என்றாலும், வரவு–செலவுத்திட்டத்தில் நீண்டகால இலக்குகள் முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு முன்னோக்கி செல்வோம்.

நீண்டகால திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டமும் ஒன்று. நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அத்திட்டத்தை முன்னோக்கி கொண்டுசெல்ல வேண்டியுள்ளது. அத்திட்டத்தை நிறுத்த முடியாது. அவ்வாறு செய்தால் நாடு பின்னோக்கி செல்லும். அதனால் இத்திட்டத்தில் உள்ள குறைப்பாடுகளை நீக்கி பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்யவே எதிர்பார்க்கிறோம்.

ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாடுகளின் பிரகாரம் கடன் மறுசீரமைப்பு பணிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படும். அடுத்த வருடம் வரவு – செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதில் எமக்கு சில இலக்குகள் உள்ளன. அதனால் இத்திட்டத்தை தொடர்ந்து இழுத்தடிப்பு செய்ய முடியாது.” என்றார்.

## சிரியாவுக்கு ... தொடர்ச்சி ...

ஒரு நிரந்தர அமைதி ஏற்பட வேண்டும். ஆயுதக்குழுக்களின் விரிவாக்கம், ஈராக், துருக்கி மற்றும் ஜோர்டான் ஆகிய நாடுகளை பாதிப்பதை விட ஈரானையே அதிகம் பாதிக்கும்.

சிரியாவில் ஒரு நிரந்தர அமைதி ஏற்படவேண்டும் என்றால் முதலில் சிரியாவில் இருந்து துருக்கி படையினர் வெளியேற வேண்டும். இது தொடர்பான பேச்சுக்களை மேற்கொள்ள நான் மொஸ்கோவிற்கு செல்லவுள்ளேன். என கட்டார் ஊடகத்திற்கு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஹயற் ரகீர் அல் சாம் எனப்படும் அல்கைட குழுவுடன் இணைந்து இயங்கும் ஆயுதக் குழுவினர் கடந்த வாரம் முதல் சிரியாவின் இலிப் என்ற பகுதியில் இருந்து முன்நகர்ந்து அலிப்போ பகுதி மீது பெரும் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு எதிராக ரஸ்யாவின் வான்படை உதவியுடன் சிரியா தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது.

2020 ஆம் ஆண்டு ரஸ்யாவுடன் மேற்கொண்ட போர் நிறுத்த பேச்சுக்களைத் தொடர்ந்து இந்த ஆயுதக்குழுக்கள் துருக்கியின் பாதுகாப்புடன் இந்த பகுதிகளில் நிலைகொண்டிருந்தன. துருக்கி, சிரியா, ரஸ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் இணைந்து கசகஸ்தானில் 2017 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் ஒரு உடன்பாட்டை எட்டியிருந்தன. ஆனால் தற்போது அந்த உடன்பாடு ஆயுதக்குழுவினரால் மீறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## நமீபியாவில் ... தொடர்ச்சி ...

மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சனைகள் இருந்தாலும் 1990 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்ததில் இருந்து தென்-மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு என்ற கட்சியே அதிகாரத்தில் இருந்து வரு கின்றது. எனினும் 2014 ஆம் ஆண்டு 87 விகிதமாக இருந்த அதற்கான ஆதரவுகள் 2019 ஆம் ஆண்டு 56 விகிதமாக குறைவடைந்திருந்தது. கடந்த மாதம் இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் ஆளும் கட்சி 96 இடங்களில் 51 இடங்களை கைப்பற்றியிருந்தது.

## இளைஞர்களுக்கு ... தொடர்ச்சி ...

கொடுமையின் எதிரொலியே ஐ.தே.க.வின் பின்னடைவுக்கு காரணமாகுமென்று பலரும் பேசிக் கொள்வதையும் இப்போது கேட்க முடிகின்றது.

இம்முறை தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் ஜீவன் தொண்டமானுடன், ஐக்கிய மக்கள் சக்தியின் பட்டியலில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதா கிருஷ்ணன் ஆகியோரும் வெற்றி பெற்றுள்ள நிலையில் இவர்கள் கடந்த பொதுத்தேர்தலில் பெற்ற வாக்குகளைக் காட்டி லும் குறைந்தளவு வாக்குகளையே பெற்றுக் கொண்டமையும் நீங்கள் அறிந்ததாகும். அத் தோடு இம்மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஷ்வரன், உதயகுமார் ஆகியோரின் வெற்றியும் சாத்தியப்படாமல் போனது. இதேவேளை நுவரெலியா மாவட்டத் தில் வெற்றி பெறுவார் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஒரு வேட்பாளராக முன் னாள் அமைச்சர் அமரர் சந்திரசேகரனின் மகள் அனுஷா சந்திரசேகரன் காணப்பட்டார். எனினும் மைக் சின்னத்தில் (ஐக்கிய ஜனநாயகக் குரல்) போட்டியிட்ட இவரால் வெற்றி பெற முடியவில்லை. நுவரெலியா மாவட்டத்தில் சில வேட்பாளர்கள் தமிழ் மக்களின் வாக்குகளை காட்டிலும் சிங்கள மக்களின் வாக்குகள் தமக்கு கிடைக்கும் என்று நம்பிக்கை கொண்டிருந்தனர். எனினும் இதில் 'மண் விழுந்த' நிலையில் சிங்கள மக்களில் அதிகமானோர் இம்முறை தேசிய மக்கள் சக்திக்கே தமது ஆதரவை வழங்கி இருந்தனர்.

பதுளையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான வடிவேல் சுரேஷ், அ.அரவிந்தகுமார் ஆகியோர் தோல்வி கண்டுள்ளனர். இதே வேளை கண்டி மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட வேலு குமார் சுமார் ஏழாயிரம் வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்திருக்கின்றார். இவர் ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடாக கடந்தகால பொதுத்தேர்தலில் போட்டியிட்டு இரண்டு தடவைகள் பாராளுமன்றத்திற்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இம்மாவட்டத்தில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் வேட்பாளர் பிரசாத்தும் குறைந்தளவு வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்திருக்கின்றார். இவர் பெற்றுக் கொண்ட வாக்குகள் சுமார் 3000 ஆகும். இந்நிலையில் ஏற்கனவே இ.தொ.கா.வில் அங்கம் வகித்த பாரத் அருள்சாமி அக்கட்சியில் இருந்து விலகி ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பட்டியலில் கண்டி மாவட்ட வேட்பாளராக களமிறங்கினார். எனினும் அவரும் வெற்றி வாய்ப்பை இழந்தார்.

### ஷோபனா சொல்வதென்ன?

இதேவேளை தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்ற நான்கு மலையக வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றி பெற்று இம்முறை பாராளுமன்றம் செல்கின்றனர். பதுளை மாவட்டத்தில் இருந்து கிட்ணன் செல்வராஜ், அம்பிகா சாமுவேல் ஆகியோர் பாராளுமன்றத்துக்கு செல்லும் நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து கிருஷ்ணன் கலைச்செல்வியும், இரத்தினபுரி மாவட்டத்தில் இருந்து சுந்தரலிங்கம் பிரதீப் என்ற இளைஞரும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். நீண்டகால இடைவெளியின் பின்னர் இரத்தினபுரி மாவட் டத்திற்கு ஒரு தமிழ் பாராளுமன்ற பிரதிநிதித் துவம் கிடைத்துள்ளமை தொடர்பில் இம்மாவட்ட மக்கள் தமது மகிழ்ச்சியினை வெளிப்படுத்தியுள்ளனர். இதேவேளை பாராளுமன்றத்தில் மலையக பெண் பிரதிநிதித்துவம் என்பது நீண்டகாலமாகவே ஒரு கனவாகவே இருந்தது. இந்த கனவை இப்போது அம்பிகா, கலைச்செல்வி ஆகியோர் நனவாக்கி இருக்கின்றனர். தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளர் கலைச்செல்வி 33,346 வாக்குகளையும், தேசிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட வேட்பாளர் அம்பிகா 58,201 வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்தில் காலடி எடுத்து வைக்கின்றனர். இது மலையக பெண்களின் அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும் என்று பேராதனைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஆர்.ஷோபனாதேவி குறிப்பிடுகின்றார். மலையகப் பெண்களின் வாழ்வில் பல்வேறு அபிவிருத்தி ஏற்படுவதற்கு இது உந்துசக்தியாக அமையும் என்பதும் ஷோபனாதேவியின் கருத்தாகவுள்ளது.

முடிவாக அரசியல் என்பது ஒரு குறிப்பிட்டவர்களுக்கே உரித்தான சொத்து அல்ல. இது பன்முகப்படுத்தப்படுவதோடு சகலரும் அரசியலில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்பட வேண்டும். அந்த வாய்ப்பினை இப்போது தேசிய மக்கள் சக்தி பெற்றுக் கொடுத்திருக்கின்றது. பரம்பரை அரசியலில் ஆதிக்கம் செலுத்தியவர்கள் இத்தேர்தலில் காணாமல் போயிருக்கின்றார்கள். 176 புதியவர்கள் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திற்கு உள்ளீர்க்கப்பட்டிருப்பது உண்மையில் மாற்றத்திற்கான அத்திபாரமாகவே அமையும் என்பதையும் மறுப்பதற்கில்லை. சமகால அரசியல் சூழ்நிலைகளையும் முன்னெடுப்புக்களையும் மலையக அரசியல்வாதிகள் விளங்கிக்கொள்ள வேண்டும். எனினும் அவர்கள் இதனை விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை. பிழைப்பூதியம் கருதி அரசியலுக்குள் நுழைகின்ற நடவடிக்கை இனியும் சாத்தியப்படாது. அத்தோடு வாரிசு கலாசாரத்தை மையப்படுத்தி செயற்படுவதையும் நிறுத்திக்கொள்ள வேண்டும். மலையக அரசியல்வாதிகளின் கடந்தகால அரசியல் செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடையே அதிகமான அதிருப்தி காணப்படுகின்றது. இதனைவிளங்கிக்கொண்டு அவர்கள் முன்செல்ல வேண்டும். மலையக அரசியல் இப்போது குப்புற விழுந்துவிட்டது. இதற்கு காரணகர்த்தாக்களாக மலையக அரசியல்வாதிகளே விளங்குகின்றனர். எனினும் ' குப்புற விழுந்தும் மீசையில் மண் ஒட்டாத கதையாக' இவர்களின் போக்கு அமைந்திருக்கின்றது. தான் மட்டும் வெற்றி பெற்றால் போதும் என்ற நோக்கில் சமூக சிந்தனை இல்லாது சில மலையக அரசியல்வாதிகள் செயற்படுகின்றார்கள். இவர்கள் சமூகத்தின் சாபக்கேடுகள் என்பதைத்தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லை. மக்களை மயக்கப் படுத்துவதாலும், வேறு சில அற்ப சலுகைகளை வழங்குவதாலும் மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று இன்னமும் சில மலையக அரசியல்வாதிகள் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். இது அவர்களின் அறியாமையாகும் என்பதைத்தவிர வேறொன்று மில்லை.

### நாற்காலிகளை சூடேற்றுதல்

கடந்த பொதுத் தேர்தலின்போதும் அது நடந்தேறி இருக்கின்றது. இவையெல்லாம் புத்திசாலித்தனமான செயற்பாடுகள் ஆகாது. மலையக சமூகம் இப்போது கல்விமையச் சமூகமாக உருவெடுத்து வருகின்றது. இளைஞர்கள் பல்துறை ஆளுமை கொண்டவர்களாக விளங்குகின்றார்கள். நீங்கள் பாராளுமன்றம் சென்று சாதிக்கமுடியாதவற்றை அவர்கள் சாதிக்க தயாராக இருக்கின்றார்கள். உங்களைப் போல் வெறுமனே நாற்காலிகளைச் சூடேற்றவும், வயிற்றுப் பிழைப்புக்காக, பந்தாவுக்காக அரசியல் செய்வதற்கும் இன்றைய மலையக இளைஞர்கள் தயாராக இல்லை. சமூகத்தின் வலியை நன்றாக உணர்ந்த அவர்கள், இச் சமூகத்தை மேலெழும்பச் செய்வதற்கு, தம்மாலான உச்சகட்ட பங்களிப்பினை வழங்க அவர்கள் தயாராகவே இருக்கின்றார்கள். எனவே அவர்களுக்கு வழிவிட்டு, இதுகாலவரை பரம்பரை பரம்பரையாக அரசியலில் ஊறித் திளைத்தவர்கள் விலகிக்கொள்ள வேண்டும். அது மலையக சமூகத்திற்கு நீங்கள் செய்யும் மிகப்பெரிய நன்றிக் கடனாக இருக்கும். பாரம்பரிய அரசியல் கலாசாரத்தில் இருந்து மலையகமும் விடுபட வேண்டும். இது அவர்களின் முன்னேற்றத்திற்கு வழி சமைப்பதாக அமையும் என்பதே உண்மையாகும்.

• • •

## நம்பிக்கை ... தொடர்ச்சி ...

பெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக்கட்சியும் பெரும்பான் மையை பெறவில்லை, அது அங்கு ஒரு அரசியல் உறுதியற்ற தன்மையை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் தற்போதைய நிலை அங்கு மேலும் அரசியல் பலவீனத்தை தோற்றுவித்துள்ளது.

தீர்மானத்தை ஆதரியுங்கள் இல்லை எனில் அதில் கலந்துகொள்ளவேண்டாம் என்ற தெரிவுகள் உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட போதும், 331 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்துள்ளனர். தீர்மானத்தை நிறைவேற்ற 288 வாக்குகளே தேவை என்பதால் பிரதமர் தனது பதவியை இழந்துள்ளார்.

60 பில்லியன் யூரோக்கள் நிதிக்குறைப்பைக் கொண்ட வரவுசெலவுத்திட்டம் பிரான்ஸ் மக்களுக்கு எதிரானது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தியுள்ளன. எனினும் தன்னை பதவியில் இருந்து அகற்றினாலும் பிரான்ஸின் பொருளாதாரம் மீள்வதற்கு வழியில்லை என பனியர் தெரிவித்துள்ளார். இந்த வார இறுதியில் புதிய அமெரிக்க அதிபர் டொனால்ட் டிறம் பிரானஸ் வரவுள்ள நிலையில் பிரான்ஸில் அரசியல் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பிரான்ஸின் அரசியல் குழப்பத்திற்கு பொருளாதார நெருக்கடியே முக்கிய காரணம் என கூறப்படுகின்றது.

## மனிதஉரிமை ... தொடர்ச்சி ...

இற்றைவரை பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்படாத நிலையில், கடந்தகால மற்றும் சமகால குற்றங்களை ஆவணப்படுத்தி, அவற்றுக்கான சான்றுகளைப் பகுப்பாய்வு செய்து, உண்மையைக் கண்டறிவதற்கு ஏதுவான சகல வழிமுறைகளையும் உரியவாறு பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

அதேவேளை இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின்போது போர்க் குற்றங்களில் ஈடுபட்டதாக நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் இலங்கை அதிகாரிகளுக்கு எதிராக பிரிட்டனின் தற்போதைய புதிய அரசாங்கம் எதிர்வரும் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று தடைகளை விதிக்கும் என எதிர்பார்க்கின்றோம்' எனத் தெரிவித்துள்ளார்.

## நிறைவேற்றதிகார ... தொடர்ச்சி ...

தெளிவற்ற மற்றும் பரந்துபட்ட வரையறையின் அடிப்படையில் கைது செய்வதற்கான காவலில் வைப்பதற்கான அதிகாரங்களை வழங்குகின்றது எனவும் தெரி வித்துள்ளது.

இவ்வாறான அதிகாரங்கள் நீதிஆய்விற்கு உட்படுத்தப்படுவதில்லை, மேலும் இது பரந்துபட்ட அசாதாரண ஜனாதிபதி அதிகாரங்களையும் வழங்குகின்றது என தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் அமைப்பு பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவது மனித உரிமைகளிற்கு மாத்திரமின்றி நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் ஆகியவற்றிற்கும் அவசியமானது என தெரிவித்துள்ளது.

## கஜேந்திரகுமாரின் ... தொடர்ச்சி ...

அரசியல் யாப்பு வரைவு தயாரிக்கப்பட்டது. அதில் தமிழ்தேசிய கூட்டமைப்பால் முன்வைக்கப்பட்ட சமஷ்டி அடிப்படையிலான தீர்வு விடயம் உள்வாங்கவில்லை என ஒரு சாராரும், அதில் சமஷ்டி என்ற சொல்பதம் இல்லை எனினும் சிங்கள மொழியில் “எக்கராச்சிய” என்ற சொல்லுக்குள் சமஷ்டி உள்ளது என ஒரு சாராரும் கூறி விமர்சனம் செய்தனர்.

உண்மையில்தமிழர்களுக்கானஉரிமைகள் தமிழர்களுக்கான தீர்வுகள் இலங்கையில் புதிய அரசியல் அமைப்பை தயாரிக்கும் போது தமிழர்களுக்கு விளங்கும் தமிழ் மொழியிலேயே அந்த சொற்பதங்கள் அமையவேண்டும்.

சிங்களமொழியில் “எக்கராச்சிய” அல்லது அவர்களை திருப்திப்படுத்துவதற்கான சொல்லாடல்களை ஆமோதித்து புதிய அரசியலமைப்பில்தமிழர்களுக்கானஉரிமைமறுதலிக்கும் விதமாக அரசியல் யாப்பு அமையுமானால் அது கடந்த *1972. 1978,* ஆண்டுகளில் தமிழ் தலைமைகள் ஏற்றுக்கொள்ளாத அரசியல் அமைப்பாக மாறவே சந்தர்ப்பங்கள் உண்டு.

அதன் அடிப்படையில் தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட வரைவு மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் அடுத்தகட்டநகர்வுகள்குறித்துக்கலந்துரையாடும் நோக்கில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வார இறுதியில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்றக்குழுத் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை மன்னாரில் சந்திக்கவிருக்கிறார்.

கடந்தவாரம்தமிழரசுக்கட்சிபாராளுமன்ற குழுத்தலைவர் ஸ்ரீதரனையும் சந்தித்திருந்தார். அண்மையில் நடைபெற்றுமுடிந்த பொதுத்தேர்தல் முடிவுகளை அடுத்து, இனிவருங்காலங்களிலேனும் தமிழ்த்தேசிய அரசியல் கட்சிகள் தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி ஒன்றுபட்டுப்பயணிக்கவேண்டும்என்றவிடயம் பல்வேறு தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

அதன்படி தமிழ் மக்கள் பேரவையினால் தயாரிக்கப்பட்ட தீர்வுத்திட்ட முன்மொழிவை அடிப்படையாகக்கொண்டு ஏனைய தமிழ்த்தேசிய கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவதாக கஜேந்திரகுமார் கூறியுள்ளார்’ என்றார்.

அதற்காக தமிழ் மக்கள் பேரவை தயாரித்த தீர்வு முன்மொழிவுகளை ஏற்க வேண்டும் என நான் கூறவில்லை, அந்த முன்மொழிவுகளையும், நல்லாட்சி காலத்தில் தயாரித்த முன்மொழிவுகளையும் இரண்டு வரைவுகளையும் மீண்டும் ஒரு தடவை சகல தமிழ்தேசிய கட்சிகள், சிவில் அமைப்புகள், புத்தி ஜீவிகள், என்போர் ஆராய்ந்து ஒட்டுமொத்த தமிழர்களும் ஏற்கும் விதமாக புதிய அரசியல் யாப்பு தமிழ் தேசிய தலைமைகளும் ஏற்றதான யாப்பாக வரவேண்டும் என்பதே எமது விருப்பம்.

இதில் யார் முயற்சி எடுக்கிறார் என்பதை விட என்ன முயற்சி எடுக்கிறார் என்பதை மட்டும் பார்த்து விமர்சனங்களை முன்வைப்பதே ஆரோக்கியமானதாக அமையும் எனவும் மேலும் கூறினார்.

## அனுராவின் ... தொடர்ச்சி ...

வண்டியோட்ட முயன்றால் ஏமாந்துவிடுவோம்.

சட்டத்தைக் காப்பாற்றுவதும், நீதியை நிலைநாட்டுவதும்தான், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசின் பிரதான கடமை. கொலையாளிகளைக் காப்பாற்றுவதையே முழுமுதல் நோக்கமாகக் கொண்ட எந்த அரசும், ஜனநாயக விழுமியங்களுக்கு விரோதமானது. உங்களுக்கு நீதி கொடுக்க மாட்டோமென்பதை மறைமுகமாக உணர்த்துகிற ஒரு அரசால், தமிழ் மக்களுக்கு வேறு எதைத்தான் கொடுத்துவிட முடியும்! ‘உள்நாட்டு நீதிப் பொறிமுறை மூலம் தீர்வு’ என்கிற பழைய பாட்டையே பாட புதிதாக ஒரு அனுரா எதற்கு?

உலகின் மூலை முடுக்கெல்லாம் சிதறிக் கிடந்தாலும், தாய்மண்மீதான ஈர்ப்பை எக்காலத்திலும் இழக்காதவர்கள், புலம்பெயர் தமிழ் உறவுகள். இன அழிப்புக்கு நீதி வழங்க அனுரா ஒரு துரும்பைக் கூடத் தூக்கி வைக்கப்போவதில்லை என்பதை அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள். போர் என்கிற பெயரால அரசின் கஜானாவைச் சுரண்டுகிற நோக்கத்துடனேயே அரங்கேற்றப்பட்ட ஒரு இனப்படுகொலைக்கே நீதி கொடுக்க மறுக்கும் அனுரா அரசால், தமிழ் மக்களுக்கு வேறெதையும் கொடுத்துவிட முடியாது – என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. வாகரை முதல் முள்ளிவாய்க்கால் வரை விரட்டி விரட்டிக் கொல்லப்பட்ட ஒன்றரை லட்சம் தமிழ்மக்களுக்கும், சீரழிக்கப்பட்ட பல்லாயிரம் சகோதரிகளுக்கும் நீதி கேட்பதுதான், மற்றெல்லாவற்றையும் காட்டிலும் முக்கியம். ஆனால், இந்த விஷயத்தில்,மைத்திரி முதல் ரணில் வரையிலான அத்தனைப் பேரும், தங்கள் அரசியல் எதிரிகளான ராஜபக்சக்களையும், அவர்களது உத்தரவுகளுக்கு அடிபணிந்து மிருகத்தனமாக நடந்துகொண்ட ராணுவத்தினரையும் காப்பாற்றவே, காலங்கடத்தும் உத்தியைக் கடைப்பிடித்தனர். அனுராவும் அதைத்தான் செய்வார் என்பது, அவர் அதிபர் நாற்காலியில் அமர்ந்ததுமே அம்பலமாகியிருக்கிறது.

தமது ஆட்சியில்தான், தமிழினத்தின் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தத் தடை விதிக்கப்படவில்லை-என்று அனுரா சொன்னால், அதைவிட பெரிய நகைச்சுவை வேறெதுவும் இருக்க முடியாது. இவர் தடையே விதித்திருந்தாலும், தங்கள் நெஞ்செலாம் நிறைந்திருக்கும் மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தும் கடமையிலிருந்து எங்கள் வடக்கும் கிழக்கும் பின்வாங்கியிருக்காது.

மாவீரர் நாள் நிகழ்வுகளை அனுமதித்துவிட்டு, தமிழின அழிப்புக்கு நீதிகொடுக்க மறுப்பது, திட்டமிட்ட நயவஞ்சக நகர்வு. ‘உள்ளகப் பொறிமுறை மூலம் உரிய நீதியை வழங்க உறுதியளித்திருக்கிறோம்’ என்பது, அதி நயவஞ்சக நகர்வு. பன்னிரெண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, ஒரே ஒரு எழுத்துக்கூட மாறாது ஒலிக்கிற வசனம் இது. இந்த வசனத்தில் இருக்கிற விஷத்தன்மையைப் புரிந்துகொண்டு, கழுத்தில் கத்தியை வைத்து – ‘நீதி கொடுக்கிறாயா இல்லையா’ என்று கேட்டால்தான், நீதி கிடைக்கும். அந்தக் கத்தி எதுவென்று புலம்பெயர் தமிழ்ச் சொந்தங்கள்தான் கண்டறிய வேண்டும்.

நீதி வழங்க மறுப்பதும், நீதி வழங்காமல் இழுத்தடிப்பதும் வேறு வேறு அல்ல! *15* ஆண்டுகளாக நீதி தராமல் இழுத்தடிப்பவர்களின் உண்மையான நோக்கம், நீதியை இழுத்தடிப்பது அல்ல! இழுத்தடிப்பு என்கிற போர்வையில், நீதி கொடுக்க மறுப்பதுதான் அவர்களது நோக்கம்.

இந்தத் தீய எண்ணத்தைப் புரிந்துகொண்டு, நீதிக்கான போராட்டத்தைத் தீவிரப்படுத்துவது தமிழினத்தின் கையில்தான் உள்ளது. எவருக்கும் அஞ்சாமல், எவரிடத்தும் கெஞ்சாமல், தலைநிமிர்ந்து நின்ற ஒரு தலைவனின் அறம்சார் மறத்தை நாம் மறந்துவிடக்கூடாது. அந்த மகத்தான மனிதனுக்கு இருந்த மனஉறுதியுடன், நீதி கோரும் நடவடிக்கைகளை நாம் தீவிரப்படுத்தினால் மட்டுமே நம் அன்புக்குரியவர்களுக்கான நீதியை நாம் பெறமுடியும். மயிலே மயிலே இறகு போடு – என்றால், மயில் போடாது. போடு போடு என்று போட்டால் மட்டுமே மயில் இறகு போடும். இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு களத்தில் இறங்குவதுதான் அறிவுடைமை.

• • •




## இந்தியாவின் ... தொடர்ச்சி ...

இந்தியாவில் மேற்கொண்டிருந்தோம். அங்கு முதலீடுகளை மேற்கொள்வது இலாபம் தரும் தொழில் எனவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

உக்ரைன் போருக்கு பின்னர் ரஸ்யாவின் எரிபொருட்களை இந்தியா மலிவு விலையில் அதிகளவில் கொள்வனவு செய்வதால் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம் *65* பில்லியன் டொலர்களாக உயர்ந்துள்ளது. இந்தியா தனது எரிபொருள் தேவையில் *85* விகிதமானவற்றை இறக்குமதி செய்து வருகின்றது. அதன் பிரதான இறக்குமதி நாடாக ரஸ்யாவே உள்ளது.

இந்த வர்த்தகத்தை *100* பில்லியன் டொலர்களாக அதிகரிக்க இரு நாடுகளும் திட்டமிட்டுள்ளன. அதேசமயம், ரஸ்ய அதிபர் எதிர்வரும் வருடம் இந்தியாவுக்கு வரவுள்ளதாக இந்திய தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தாயகமும் வாழ்வும்


VINO
Kings Ice




MR
PHARMACY
TVS




FAMILY VILLA
LAVELI
ROOMS
Rizwan Hotel
A/C & NON A/C ROOMS

